


அடுத்த வருடம் மார்ச் மாதம் புதிய பிரதமர் ஒருவரை ஜனாதிபதி கோட்டாபய நியமிப்பாரெனவும் மஹிந்த ராஜபக்ஷவே அந்தப் புதிய பிரதமர் என்றும் அரசாங்கத்தின் உள்ளகத் தகவல்கள் சொல்கின்றன.

பிரதமர் பதவியில் இருந்து மஹிந்த விலகியமை குறித்து ஜனாதிபதி கோட்டா கடும் மனக்கவலையில் இருக்கிறாராம். எனவே, மனம் நிம்மதியடையும் வகையில் அவர் மஹிந்தவை மீண்டும் பிரதமராக கொண்டுவரவுள்ளார் என்று சொல்லப்படுகிறது.

Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 547 சுபகிருது வருடம், ஆனி மாதம் 07ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (21.06.2022) ஹிஜ்ரி - 1443, ஜுல்ஹஃதா - 20, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

கமெண்ட் கந்தர்..




# 21ஆவது திருத்தம் விரைவில் சபைக்கு!

## அமைச்சரவை நேற்று அனுமதி

(யோ.தர்மராஜ்)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் அதிகாரங்களை மேலும் குறைப்பதற்காக தற்போதைய அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள 21ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போதே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, 21ஆவது திருத்தம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட அரசியல் இழுபறிசூழ்நிலையில் ஜனாதிபதி பதவி விலகவேண்டும் என முழு நாடும் போராட்டத்தில் ஈடுபட்ட வேளையில், மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகியதையடுத்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகாது தன்னுடைய அதிகாரத்தை குறைப்பதற்கான அரசியலமைப்புத் திருத்தத்தை கொண்டுவருவதாகக் கூறினார்.

அதற்கமைய, புதிய பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் புதிய அரசாங்கம் பதவி ஏற்றதுடன், முதல் அமைச்சரவையிலேயே நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியின்...

02 பக்கம்

# அரசாங்கத்தை மாற்றாமல் நெருக்கடிக்கு தீர்வில்லை!

## மைத்ரிபால தெரிவிப்பு

(யோ.தர்மராஜ்)

நானும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் ஒன்றாக இணைந்து செயற்பட்டுள்ளோம். எனவே, அவரால் பிரச்சினைக்குத் தீர்வு வழங்க முடியாது என்பது எனக்குத் தெரியும். எனவே, தற்போதைய அரசாங்கத்தை மாற்றாது, நெருக்கடிகளுக்கு எவ்வித தீர்வையும் மக்களால் பெற்றுக்கொள்ள முடியாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார்...

02 பக்கம்

# போராட்டக்காரர்களால் பாதிக்கப்பட்ட பேச்சு!

## காத்திருந்த சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள்

(யோ.தர்மராஜ்)

ஜனாதிபதி செயலகம் மற்றும் நிதி அமைச்சின் நுழைவாயிலை சுற்றிவளைத்த போராட்டக்காரர்களால் இலங்கை வந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் குழு மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைக்கு பாதிப்பு ஏற்பட்டது.

பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட்டிருந்த...

02 பக்கம்



காலிமுகத்திடலில் நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது, ஜனாதிபதி செயலக முகப்பிலுள்ள எழுத்துகள் மீது ஒருவர் கறுப்பு மையை பூசும் காட்சி...

# மூன்று மாதங்களில் மரக்கறி தட்டுப்பாடு!

## வர்த்தகர்கள் சங்கம் எச்சரிக்கை

அடுத்த மூன்று மாதங்களில் சந்தைக்கு மரக்கறிகள் விநியோகிக்கப்படுவது முற்றாக நின்று போய்விடும் என பொருளாதார மத்திய நிலையங்கள் மற்றும் மெனிங் சந்தை ஆகியவற்றின்...

02 பக்கம்



# சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான விமான சேவையை விஸ்தரிக்க தீர்மானம்

## ஜனாதிபதியை சந்தித்த சீனத் தூதுவர் அந்நாட்டு ஜனாதிபதியின் விசேட கடிதமொன்றையும் கையளித்தார்

சீனா மற்றும் இலங்கைக்கு இடையில் முன்னெடுக்கப்படும் விமானப் போக்குவரத்து நடவடிக்கைகளை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இவ்வாரத்திலிருந்து சீனா, இலங்கைக்கு 03 விமான சேவைகளை முன்னெடுக்க தீர்மானித்துள்ளது. அத்துடன் சீனாவுக்கான ஸ்ரீலங்கன் விமான சேவையினையும் அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது...

02 பக்கம்

# எரிபொருள் தட்டுப்பாடு உக்கிரம்; வீதிகளில் மக்கள் திண்டாட்டம்!

(யோ.தர்மராஜ்)

நாட்டில் உக்கிரமடைந்துள்ள எரிபொருள் பற்றாக்குறைக்கு மத்தியில் எரிபொருள் நிலையங்களில் நீண்ட வரிசையில் மக்கள் காத்திருப்பதுடன், சில பகுதிகளில் மக்கள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினருக்கிடையே முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

இதேவேளை, அத்தியாவசிய சேவையாளர்களுக்கு எரிபொருள் விநியோகத்தில் முக்கியத்துவம் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுவதால் பல பகுதிகளில் வரிசையில் காத்திருக்கும் மக்களுக்கும் அரசசேவையாளர்களுக்கும் இடையிலும் பாரிய முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

மேலும், பரீட்சை வினாத்தாள்களை திருத்தும் பணியிலுள்ள ஆசிரியர்களுக்கு உரிய முறையில் எரிபொருள் வழங்காதமையினால் நேற்று இரண்டாவது நாளாகவும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதையும் காண முடிந்தது.

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு இருக்கும் நிலையில் தேவையான எரிபொருளை இறக்குமதி செய்வதில் காலதாமதம் ஏற்படுகின்றது. இதனால் கையிருப்பிலுள்ள எரிபொருட்களும் வரையறுக்கப்பட்டு இறுக்கமான முறையிலேயே விநியோகிக்கப்படுகின்றன. இதனால், பல மணித்தியாலங்கள் மற்றும் பல...

02 பக்கம்

# நுவரெலியா பிரதேச சபைத் தலைவர் யோகா இ.தொ.காவிலிருந்து நீக்கம்!

## 'தமிழன்' வெளிக்கொணர்ந்த செய்திகளையடுத்து காங்கிரஸ் தலைமை அதிரடித் தீர்மானம்

(நமது நிருபர்)

நுவரெலியா பிரதேச சபைத் தலைவர் வேலு யோகராஜ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அடிப்படை கட்சி உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்...

02 பக்கம்

# கோட்டாவை வாழ்த்திய மஹிந்த, நாமல்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று தனது 73ஆவது பிறந்தநாளை கொண்டாடிய நிலையில், அவருடைய அண்ணனான முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மஹிந்த ராஜபக்ஷ தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அந்த பதிவில்,

02 பக்கம்

# ஜனாதிபதி செயலகத்தின் அனைத்து வாயில்களையும் மூடிப் போராட்டம்



## கைதான 21 பேருக்கும் பிணை

(யோ.தர்மராஜ்)

கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகம் மற்றும் நிதி அமைச்சின் நுழைவாயில்களை முற்றுகையிட்ட 21 போராட்டக்காரர்கள் நேற்று அதிகாலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் குழுவினருக்கும் பிரதமர்...

02 பக்கம்

# நீதிமன்ற தீர்ப்பு கிடைக்கும்வரை பதவியேற்கப் போவதில்லை!

## தம்மிக்க பெரேரா அறிவிப்பு

தனது நியமனத்தை சவாலுக்கு உட்படுத்தும் மனுக்கள் தொடர்பில் முடிவெடுக்கும் வரையில் நாடாளுமன்ற உறுப்பினராகவோ அல்லது அமைச்சராகவோ சத்தியப்பிரமாணம் செய்யப்போவதில்லை என்று தொழிலதிபர் தம்மிக்க பெரேரா உயர் நீதிமன்றில் உறுதியளித்துள்ளார்.

தமது நாடாளுமன்ற உறுப்பினர் நியமனத்தை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட ஐந்து அடிப்படை உரிமை மனுக்கள் நேற்று, உயர்நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டபோதே அவர் இந்த உறுதியை வழங்கினார்.

உயர் நீதிமன்ற...

02 பக்கம்

# முச்சக்கரவண்டி சாரதிகளின் வாழ்வாதாரம் நெருக்கடியில்!

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக 08 இலட்சத்து 50 ஆயிரம் தொழில்முறை முச்சக்கரவண்டி சாரதிகளின் வாழ்வாதாரம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாக தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன.

எரிபொருள் நெருக்கடிக்கு உடனடியாக தீர்வு வழங்கப்படாவிட்டால் மூன்று மில்லியன் மக்கள் பாதிக்கப்படுவார்கள் என அகில இலங்கை முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சுதில் ஜயருக் தெரிவித்தார்.

போதிய எரிபொருட்களின்றி அவர்களால் தொழிலைத் தொடர முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

02 பக்கம்

# இலங்கைப் பொருளாதார அபிவிருத்தி குறித்து மொரகொட டில்லியில் பேச்சு



நலிவடைந்த இலங்கைப் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கும் இந்தியாவின் உதவிகளை மீளப்பெறுவதற்கும் இந்தியாவிற்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட நேற்று இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்ஷங்கரைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இலங்கையின் தற்போதைய அபிவிருத்திகள் குறித்து அமைச்சர் ஜெய்ஷங்கருக்கு உயர்ஸ்தானிகர் மொரகொட, விளக்கமளித்ததுடன், அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் எரிபொருளுக்கான கடன்கள் மற்றும் நிலுவை போன்ற வடிவங்களில்...

02 பக்கம்

# பங்கீட்டு அட்டைக்கே பெற்றோல் விநியோகம்!

## எரிபொருள் தொடர்பில் யாழ். மாவட்டத்தினால் சில முக்கிய தீர்மானங்கள்

யாழ். மாவட்ட மக்களுக்கு பங்கீட்டு அட்டைக்கு எரிபொருள் விநியோகம் உள்ளிட்ட சில முக்கிய தீர்மானங்கள் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று (20) இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் எடுக்கப்பட்டது.

அவையாவன,

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தத்தம் பிரதேச செயலகங்களின் பொறுப்பில் செயற்படுவதுடன் நாளாந்த கையிருப்பு தகவல்கள் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் தினமும் காலை இரவு என இரண்டு தடவைகள் நேரடியாக சேகரிக்கப்படும். இதற்கான அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பிரதேச செயலாளர் நியமிப்பார்.

பிரதேச செயலகங்களுக்கு ஒத்துழைப்பு வழங்காத எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான விநியோகத்தை இடைநிறுத்த இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமும் இணங்கியுள்ளது.

வாகனங்களுக்கான பங்கீட்டு அட்டை முறை ஜூலை 1ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வருகிறது. அதன்படி மக்கள் தமது வதிவிட பிரதேசத்தில் உள்ள ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்தை தெரிவு செய்து அங்கு மாத்திரமே எரிபொருளை பெறும்வகையில் பொறிமுறை உருவாக்கப்படும்.

அரச உத்தியோகத்தர்கள் தமக்கான எரிபொருள் நிலையத்தை தெரிவு செய்து பதிவு செய்யும் வகையில் விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் அரச





உத்தியோகத்தர்கள் திணைக்கள தலைவர்களிடம் மாத்திரமே தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

சுகாதார சேவையினருக்கான எரிபொருள் விநியோகத்துக்கு தனியான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு பிரதேச செயலக எல்லைகளுக்குள் அமைந்துள்ள ப.நோ.கூ.ச எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அத்தியாவசிய சேவைகளுக்காக மாத்திரம் எரிபொருளை வழங்குமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர் அங்கஜன் இராமநாதனின் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில், யாழ். மாவட்ட செயலர் க. மகேசன், மேலதிக அரசாங்க அதிபர் ம. பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) முரளிதரன், பிரதேச செயலாளர்கள், பெற்றோலிய கூட்டுத்தாபன அதிகாரிகள், வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# கடமைக்கு செல்லாத ஆசிரியர்களுக்கு விசேட விடுமுறை

கடமைக்குச் செல்லாத ஆசிரியர்களுக்கு விசேட விடுமுறை வழங்க கல்வியமைச்சின் செயலாளர் இணக்கம் தெரிவித்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் (19) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தற்போதைய எரிபொருள் நெருக்கடி காரணமாக இருவாரங்கள் பாடசாலைகள் மூடப்படுவதாக கல்வியமைச்சால் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், நேற்றைய தினம் நகர்ப்புறப் பாடசாலைகளை மூடுவதாகவும், கிராமப்புறப் பாடசாலைகளை நடத்தவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

பாடசாலைகள் அனைத்தும் வகை 1ஏபி, 1சி, 2 என்னும் வகைகளாகவும், கஷ்ட- அதி கஷ்ட பிரதேச பாடசாலைகளாகவுமே வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இன்றுவரை, நகர்ப்புறப் பாடசாலைகள் மற்றும் கிராமப்புறப் பாடசாலைகள் எவை என்பதைத் தீர்மானிப்பதற்குரிய குறிகாட்டிகள் எவையும் வெளியிடப்படாத சூழலில், சில மாகாணங்களில் சகல பாடசாலைகளையும் நடத்தும் செயற்பாடு நடைபெறுகின்றது.

கிராமப்புறப் பாடசாலைகளை நடத்தும் முடிவை கல்வியமைச்சு எடுத்திருந்தாலும், கஷ்ட - அதிகஷ்ட பிரதேச பாடசாலைகள் கிராமப்புறங்களிலேயே அமைந்துள்ளன. இவ்வகையான பாடசாலைகளுக்கு வெளிமாவட்டங்களிலிருந்தும் தூர இடங்களிலிருந்தும் ஆசிரியர்கள் சென்று பணியாற்றி வருகின்றனர்.

இவ்வாறு பணியாற்றுபவர்கள் பாடசாலைகளுக்கு செல்வதற்கான எரிபொருள் வசதிகளைப் பெறுவதற்குரிய எந்தவொரு ஏற்பாடுகளையும் செய்யாது, பணிக்கு அழைக்க எடுத்துள்ள முடிவு கண்டனத்துக்குரியதாகும்.

பாடசாலைகளை சீராக நடத்தமுடியாமைக்கு அரசாங்கமே காரணமாகும். பொருட்கள் தட்டுப்பாடான நிலையில் மக்களுக்கான பங்கீடு தொடர்பாக அரசாங்கத்தின் செயற்திறனற்ற தன்மைகளே நெருக்கடிகளை தீவிரப்படுத்தியுள்ளன.

எனவே, பாடசாலைகளுக்கு செல்ல முடியாத ஆசிரியர்கள் கடமைக்கு செல்ல வேண்டிய அவசியமில்லை. கடமைக்குச் செல்லாத ஆசிரியர்களுக்கு விசேட விடுமுறை அனுமதிக்கப்படுமென கல்வியமைச்சின் செயலாளருடனான சந்திப்பில் இணக்கம் காணப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

### 21ஆவது திருத்தம்...

அதிகாரத்தை குறைத்தல், இரட்டைக்குடியுரிமை கொண்டவர்களுக்கு நாடாளுமன்றம் வருவதற்கு தடை விதித்தல், நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை பலப்படுத்தல், ஆணைக்குழுக்களுக்கு மீண்டும் அதிகாரத்தை வழங்கல் போன்ற திருத்தங்களுடன் 21ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ முன்வைத்தார்.

எனினும், ஏனைய கட்சிகளின் அனுமதி மற்றும் ஆளுந்தரப்பினரின் ஒத்துழைப்புக்காக பல்வேறு பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டன. எனினும், ஆளுந்தரப்பிலும் எதிர்த்தரப்பிலும் சில திருத்தங்கள் கொண்டுவரும்போதே ஆதரவு வழங்குவதாகக் கூறினர்.

அதன்படி, ஆளுந்தரப்பிலுள்ளவர்களின் ஒத்துழைப்பு மிக முக்கியம் என்பதால் ஜனாதிபதி, பிரதமர், முன்னாள் பிரதமர் என பலரும் ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி பல திருத்தங்களை முன்வைத்தனர். எனினும், ஆளுந்தரப்பிலுள்ள சிலர் 21ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவே முடியாது எனக் கூறியுள்ளனர்.

இந்நிலையில், பல பேச்சுவார்த்தைகள், பல தரப்பின் திருத்த யோசனைகளுடன் 21ஆவது திருத்தம் நேற்று (20) அமைச்சரவையில் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்டது. இதனையடுத்து, சில வாதப் பிரதிவாதங்களுக்கு பின்னர் அமைச்சரவையின் முழு இணக்கப்பாட்டுடன் 21ஆவது அரசியலமைப்பு திருத்தத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விரைவில் இது நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

### அரசாங்கத்தை...

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் காரியாலயத்தில் நேற்று (20) இடம்பெற்ற கட்சி கூட்டத்தில் கலந்து கொண்டதன் பின்னர் அங்கிருந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டிலுள்ள நெருக்கடிக்கும் பிரச்சினைக்கும் தீர்வு காண்பது மற்றும் புதிய அரசாங்கம் ஸ்தாபிப்பு குறித்து துறைசார் நிபுணர்கள், சிவில் அமைப்பினர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் யோசனைகளை முன்வைத்துள்ளார்கள். எங்களையும் சந்தித்துள்ளனர்.

தற்போதைய அரசாங்கத்தை கலைத்து சகல தரப்பினரையும் ஒன்றிணைத்த புதிய அரசாங்கத்தை ஸ்தாபிப்பதே சிவில் அமைப்புகள், துறைசார் நிபுணர்கள் உள்ளிட்டு அனைத்து தரப்பினரதும் பிரதான கோரிக்கையாகவுள்ளது.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதன் ஊடாக நாட்டின் நெருக்கடிக்கு தீர்வு காணும் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்ற பொது நிலைப்பாடும் உருவாகியுள்ளது. எனவே, சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு பல தரப்பினரும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு கோரிக்கைவிடுக்கும் தரப்புடன் நாங்களும் இணைந்து எங்களுடைய யோசனைகளையும் முன்வைத்து திருத்தங்களையும் முன்னெடுத்து முன்னோக்கிச் செல்வதாக பேசியுள்ளோம். தற்போதைய அரசாங்கத்தை மாற்றாது, நெருக்கடிகளுக்கு எவ்வித தீர்வையும் மக்களால் பெற்றுக்கொள்ள முடியாது. அரசாங்கத்தை மாற்ற வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாகவுள்ளது. நாங்களும் மக்கள் பக்கமே இருக்கின்றோம்.

சர்வதேச நாணய நிதியம் எங்களுக்கு உதவினால் எங்களால் நெருக்கடியிலிருந்து சற்றேனும் மீள முடியும். இன்று மக்கள் பெரும் துயரங்களை அனுபவித்துவருகின்றனர்.

### முச்சக்கரவண்டி...

நாளொன்றுக்கு ஐந்து லீற்றர் எரிபொருளை வழங்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ள வேலைத்திட்டம் தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், கிராமசேவை உத்தியோகத்தர்கள் ஊடாக முச்சக்கரவண்டி சாரதிகளை இனங்கண்டு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அல்லது இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான டிப்போக்கள் ஊடாக அவர்களுக்கு எரிபொருளை வழங்க முடியும் என்றார்.

அதிகாரிகள் அரச அமைப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு, கடுமையான திட்டத்தை விரைவில் செயற்படுத்த வேண்டும். ஒரு பயணத்தை மட்டும் இயக்குவதற்கு 2ஆயிரம் ரூபா பெற்றோலைப் பெறுவதற்கு இரண்டு அல்லது மூன்று நாட்கள் எரிபொருள் வரிசையில் காத்திருப்பதும் இன்னும் மூன்று நாட்களுக்கு வரிசையில் திரும்புவதும் மக்கள் முச்சக்கரவண்டி தொழிலை கைவிடுவதற்கு மாத்திரமே வழிவகுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, எரிபொருள் தட்டுப்பாட்டைத் தீர்ப்பதற்கும் முச்சக்கரவண்டி சாரதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் அரசாங்கம் மிகுந்த அக்கறை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### எரிபொருள் தட்டுப்பாடு...

நாட்களாகவும் மக்கள் வரிசையில் காத்திருக்க வேண்டிய அவல நிலைமை ஏற்பட்டுள்ளது.

எரிபொருள் வருவதற்கு காலதாமதமாகும். எனவே, வரிசையில் காத்திருக்க வேண்டாம் என பொறுப்பான அமைச்சர் கூறினாலும் அன்றாட தேவைகளுக்காகவும் பணிகளுக்குச் செல்ல வேண்டியவர்களும் வரிசைக்கு வர முடியாதிருக்கவே முடியாது. இதனால், வரிசைகளும் கிலோமீற்றர் கணக்கில் நீண்டுக்கொண்டே செல்கின்றன.

தற்போது எரிபொருள் கையிருப்பு குறைவு என்பதால், பல எரிபொருள் நிலையங்களில் விநியோகத்துக்கு முன்கூட்டியே எரிபொருள் தீர்ந்துள்ளதாகக்கூறி எரிபொருள் நிரப்பு நிலையத்தை மூடுவதற்கு முற்படுவதால், வரிசையில் காத்திருக்கும் மக்கள் ஆத்திரமடைந்து அங்குள்ள ஊழியர்களுடன் முரண்பாடுகள் மற்றும் எரிபொருள் தாங்கிகளை திறந்துபார்க்க முற்படுவதால் அங்கு களேபரங்களும் ஏற்படும் நிலைமை காணப்படுகின்றன.

இதனை தடுப்பதற்கு முற்படும் பாதுகாப்புத் தரப்புடனும் மக்கள் முரண்பட வேண்டிய நிலைமை ஏற்படுவதால், பல இடங்களில் இடைநடுவே எரிபொருள் விநியோகங்களும் நிறுத்தப்படுவதால், மக்கள் வீதிகளை மறித்து போராட்டத்தில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர். சில இடங்களுக்கு உரிய முறையில் எரிபொருள் விநியோகத்தை முன்னெடுக்காது சில தரப்பினருக்கு முக்கியத்துவம் கொடுப்பதால் பல இடங்களில் கைகலப்புகளும் ஏற்படுகின்றன.

எரிபொருள் விநியோகத்தின்போது, அரச ஊழியர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதால் சில இடங்களில் நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்தவர்களுக்கும் அரச ஊழியர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டன. குறிப்பாக, ஹிங்குராங்கொடை பகுதியிலுள்ள எரிபொருள் நிலையத்தில் நேற்று (20) எரிபொருள் விநியோகத்தின்போது அரச ஊழியர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டமையால் அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

எனினும், நாங்கள் சேவைக்குச் செல்லாவிட்டால் உங்களுக்கு எவ்வாறு எரிபொருள் கிடைக்கும். நாங்கள் சென்று சேவைகளை முன்னெடுத்தாலே உங்களுக்கு எரிபொருள் கிடைக்கும். இல்லையேல் 10 நாட்களல்ல, 15 நாட்களாக வரிசையில் நின்றாலும் உங்களுக்கு எரிபொருள் கிடைக்காது என அரச ஊழியர்கள் சுட்டிக்காட்டியபோது, அங்கிருந்தவர்கள் கோஷங்கள் எழுப்பி எதிர்ப்பை தெரிவித்ததுடன், எங்களை போன்று வரிசையில் நின்று நீங்களும் எரிபொருளை பெற்றுக் கொள்ளுங்கள் எனவும் கூறினர். இதனால், அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

அதேபோன்று, காலியிலுள்ள அரச சேவையாளர்களுக்கான எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் அமைதியின்மை ஏற்பட்டது. இதனால் அங்கு எரிபொருள் விநியோகமும் பல மணி நேரம் தடைப்பட்டது.

இதேவேளை, தம்புத்தேகம பகுதியிலுள்ள எரிபொருள் நிலையத்துக்கு 5 நாட்களுக்கு பின்னர் நேற்றுமுன்தினம் இரவு எரிபொருள் கிடைக்கப்பெற்றபோது, தனியார் பஸ்களுக்கு எரிபொருளை வழங்க முற்பட்டதால், வரிசையில் காத்திருந்த மக்களுக்கும் பாதுகாப்பு தரப்பினருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.

அதேபோன்று, வெல்லவாய பகுதிக்கும் நீண்ட நாட்களுக்கு பின்னர் எரிபொருள் கிடைத்தபோது, வரிசையில் காத்திருக்காத சிலர் மோட்டார் சைக்கிளிலுள்ள எரிபொருள் தாங்கியை கொண்டுவந்து எரிபொருள் பெற்றமையால் வரிசையில் காத்திருந்தவர்களுக்கும் குறித்த தரப்பினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

### மூன்று மாதங்களில்...

வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

மரக்கறி பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள 50 வீதமான விவசாயிகள் அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தினால், பயிர்ச் செய்கையில் இருந்து ஒதுங்கியுள்ளனர்.

கடந்த செப்டெம்பர் மாதம் இது குறித்து நாட்டுக்கு தெரியப்படுத்தியதாக அகில இலங்கை பொருளாதார மத்திய நிலையங்கள் மற்றும் மெனிங் சந்தை வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் அருண சாந்த தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், எதிர்வரும் 03 மாதங்களுக்கு பின்னர் நாட்டில் மரக்கறி தட்டுப்பாடு ஏற்படும் எனவும் மரக்கறிகளை கொள்வனவு செய்ய நீண்டவரிசைகள் ஏற்படலாம் எனவும் அவர் எதிர்வுகூறியுள்ளார்.

### கோட்டாவை...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துகள். தனது வாழ்க்கையின் மற்றொரு ஆண்டில் அடியெடுத்து வைக்கும் அவருக்கு எனது வாழ்த்துகள். கோட்டாபயவின் இருப்பு எப்போதும் வலிமையின் ஆதாரமாக இருந்து வருகிறது. அத்துடன், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை கோட்டாபய மீட்டெடுப்பார் என்பதில் தான் உறுதியாக இருப்பதாகவும் மஹிந்த குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பெறாமகனும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவும் தனது ட்விட்டர் பதிவில் கோட்டாபயவிற்கு வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

அந்தப் பதிவில், பிறந்தநாளைக் கொண்டாடும் கோட்டாபய ராஜபக்ஷவிற்கு நல்வாழ்த்துகள். இந்த ஆண்டும் எப்போதும் உங்களை மும்மணிகள் ஆசீர்வதித்து வழிகாட்டட்டும் என தெரிவித்துள்ளார்.

### சீனாவுக்கும் இலங்கைக்கும்...

இலங்கைக்கான சீனத்தூதுவர் கியூ சென்ஹொங் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்திருந்தார்.

சீனா இலங்கைக்கு பெற்றுக்கொடுக்க எதிர்பார்த்துள்ள பொருளாதார மற்றும் நிவாரணங்கள் தொடர்பில் இதன்போது தூதுவர் ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தியுள்ளார். சீனாவில் கல்வி கற்ற இலங்கை வைத்திய மாணவர்களுக்கு, மீண்டும் அங்கு வந்து கல்வி கற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இருதரப்பு வர்த்தக மற்றும் பொருளாதார செயற்பாடுகளை மேலும் மேம்படுத்துவது தொடர்பில் நீண்ட கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சீன ஜனாதிபதி சீ ஜிங்பிங்கினால் அனுப்பி வைக்கப்பட்ட விசேட வாழ்த்துச் செய்தி, தூதுவரினால் ஜனாதிபதியிடம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. நாடு சந்தித்துள்ள பொருளாதார நெருக்கடியின் மத்தியில், சீனா வழங்கும் ஒத்துழைப்பு தொடர்பில் ஜனாதிபதி நன்றி தெரிவித்துள்ளார்.

### நுவரெலியா பிரதேச...

உத்தியோகபூர்வமாக நேற்று அறிவித்திருக்கிறது.

கடந்த 15ஆம் திகதி இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமை காரியாலயத்தில் இடம்பெற்ற ஒழுக்காற்று நடவடிக்கை குழுக் கூட்டத்தில், வேலு யோகராஜ் மீதான குற்றம் விசாரணை செய்யப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரங்கள் ஆராயப்பட்டு, உண்மைத்தன்மையின் அடிப்படையில் நிர்வாக சபையினால் அவர் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று அக்கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா பிரதேச சபைத் தலைவரால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் காணி விற்பனை மோசடி குறித்து முதன் முதலில் 'தமிழன்' பத்திரிகை அம்பலப்படுத்தியிருந்தது. இதனையடுத்து, அதனை எழுதிய பத்திரிகையின் செய்தி ஆசிரியர் நிர்ஷன் இராமானுஜத்தை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசிய பிரதேச சபைத்தலைவர் வேலு யோகராஜ், இங்கே எழுதப்படமுடியாத வகையிலான இழிச்சொற்களை பயன்படுத்தி திட்டித் தீர்த்திருந்தார். ஆனாலும் வெளியிடப்படாத மேலும் பல தகவல்களை கொண்டிருக்கும் 'தமிழன்' ஆசிரியபீடம் இந்த விடயத்தில் உரிய நடவடிக்கைகளை காங்கிரஸ் எடுக்கவேண்டுமென்பதை வலியுறுத்தி வந்தது.

இந்தப் பின்னணியிலேயே வேலு யோகராஜ் விசாரணையின் பின்னர், கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்தே நீக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### நீதிமன்ற தீர்ப்பு...

நீதியரசர்களான பிரியந்த ஜயவர்தன, யசந்த கோதாகொட மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் முன்னிலையில் ஆராயப்பட்டது. இதன்போது ஜனாதிபதி சட்டத்தரணி றொமேஷ் டி சில்வா ஊடாக இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் இன்று செவ்வாய்க்கிழமை (21) பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

ஏற்கனவே தம்மிக்க பெரேரா, இன்றைய தினம் நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற படைக்கல சேவிதர் தெரிவித்திருந்தார்.

### ஜனாதிபதி செயலகத்தின்...

ரணில் விக்ரமசிங்கவிற்கும் இடையிலான பேச்சுவார்த்தையை குழப்பும் வகையிலேயே ஜனாதிபதி செயலகம் மற்றும் நிதியமைச்சின் நுழைவாயில்கள் போராட்டக்காரர்களால் முற்றுகையிடப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டுவரும் போராட்டக்காரர்கள் சிலர் நேற்றுமுன்தினம் இரவு ஜனாதிபதி செயலகத்திற்குள் நுழையும் கலதாரி ஹோட்டல் பக்கமுள்ள ஏனைய இரு நுழைவாயில்கள் மற்றும் நிதியமைச்சின் லோட்டஸ் மாவத்தை நுழைவாயிலையும் முற்றுகையிட்டு, அவ்விடத்திலேயே நின்று தங்களுடைய எதிர்ப்பு கோஷங்களை எழுப்பினர்.

இதனைத்தொடர்ந்து நுழைவாயில்களை தொடர்ந்து முடக்கும் வகையில் அவ்விடத்தில் கூடாரமொன்றையும் அமைத்தனர். குறிப்பாக, இரவு முதல் 24 மணித்தியாலமும் இந்த நுழைவாயிலை மூடுவதோடு, உடனடியாகவே இந்த நுழைவாயிலை திறப்போம் எனவும் போராட்டக்காரர்கள் நேற்றுமுன்தினம் இரவு முதல் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டக்காரர்கள் நேற்று காலை வரை நுழைவாயிலை முற்றுகையிட்டு போராட்டத்தை முன்னெடுத்ததால் பணிக்கு வந்த பணியாளர்கள் செயலகம் மற்றும் நிதியமைச்சினுள் செல்வதற்கும் பெரும் தடை ஏற்பட்டது. எனினும், அங்குள்ள சிறிய வழியாக பணியாட்கள் உள் நுழைந்தனர்.

எனினும், அப்பகுதியில் அதிரடிப் படையினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்ததோடு, அங்கு அமைக்கப்பட்டிருந்த கூடாரத்தையும் பாதுகாப்புத்துறையினர் அகற்றினர். இதன்போது, போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முறுகல் நிலைமை ஏற்பட்டதையடுத்து, அங்கு போராட்டத்தில் ஈடுபட்ட 21பேரை பொலிஸார் கைது செய்தனர்.

இதனையடுத்து, காலி முகத்திடலுக்குச் செல்லும் லோட்டஸ் மாவத்தை வீதியும் பொலிஸ் அதிரடிப் படையினரால் தற்காலிகமாக மூடப்பட்டது. அத்தோடு, கைது செய்யப்பட்டவர்களை ஏற்றிச்சென்ற பஸ்ஸை செல்ல இடமளிக்க முடியாது எனக் கூறி தேரர் ஒருவர் பஸ் ரயர்களுக்கு நடுவே படுத்துக்கொண்டதால், அவரை வெளியில் இழுத்த பொலிஸார் அவரையும் கைது செய்தனர். எனினும், கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யுமாறு கோரி மீண்டும் அப்பகுதியில் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்ட 21 பேரையும் பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுள் தேரர் ஒருவர், பெண்கள் 04 பேர் மற்றும் 16 ஆண்கள் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

### போராட்டக்காரர்களால்...

நிதியமைச்சின் செயலாளர் போராட்டத்தால் 30 நிமிடங்கள் தாமதித்தே கலந்து கொண்டுள்ளதாக பிரதமர் அலுவலக செய்திகள் தெரிவித்தன. நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியிலிருந்து இலங்கை மீள்வதற்கு கோரியிருந்த நிதியுதவி குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு குறித்த குழு இலங்கை வந்துள்ளது.

இக்குழுவின் வருகையையடுத்து, சர்வதேச நாணய நிதியத்தின் குழுவினருக்கும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கும் இடையிலான பேச்சுவார்த்தை ஒன்று பிரதமர் அலுவலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

எனினும், குறித்த பேச்சுவார்த்தை இடம்பெறுவதற்கு முன்பே, ஜனாதிபதி செயலகம் மற்றும் நிதியமைச்சின் நுழைவாயில்களை முற்றாக முடக்கிய போராட்டக்காரர்களால் குறித்த பேச்சுவார்த்தைக்கு பாதிப்பு ஏற்பட்டது. அப் பேச்சுவார்த்தையில் நிதியமைச்சின் செயலாளரும் கலந்துகொள்ள வேண்டியிருந்தபோதிலும், நிதியமைச்சு மற்றும் ஜனாதிபதி செயலக பகுதியில் இடம்பெற்ற இந்த போராட்டத்தால் நிதியமைச்சின் செயலாளரினால் குறித்த பேச்சுவார்த்தைக்கு உரிய நேரத்திற்குச் செல்ல முடியாது போனது.

குறிப்பாக, பேச்சுவார்த்தை ஆரம்பித்து 30 நிமிடங்களுக்கு பின்னரே நிதியமைச்சின் செயலாளர் இதில் கலந்து கொண்டதாக பிரதமர் அலுவலக செய்திகள் தெரிவித்தன. இதனால், கடனுதவி வழங்க வந்த அதிகாரிகளே கடன் வாங்கும் தரப்பு அதிகாரி வரும் வரை காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

### இலங்கைப் பொருளாதார...

இந்தியா இலங்கைக்கு வழங்கிய உதவிகளைத் தொடர்வதில் அவரது தனிப்பட்ட ஈடுபாட்டிற்கும் நன்றி தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியம், ஏனைய பலதரப்பு நிறுவனங்கள் மற்றும் இருதரப்பு அபிவிருத்தி பங்காளிகளுடன் இலங்கையின் விடயத்தை இந்தியா எடுத்துக்கொண்டதையும் அவர் பாராட்டினார்.

சுற்றுலா மற்றும் முதலீடுகள் உட்பட இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கும் மீட்பதற்குமான வழிகள் மற்றும் வழிமுறைகளை ஆராய இந்தியாவின் ஆதரவை உயர்ஸ்தானிகரிடம் அமைச்சர் ஜெய்சங்கர் உறுதியளித்தார். இது தொடர்பில் தொடர்ந்தும் தொடர்பில் இருக்குமாறு வெளிவிவகார அமைச்சர் உயர்ஸ்தானிகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்திய வெளியுறவுச் செயலர் ஸ்ரீவினய் குவாத்ரா மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரிகள் மற்றும் புதுடில்லியில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் உயர் அதிகாரிகளும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

# அரிசி விலை கட்டுப்பாடு உள்ளிட்ட விடயங்கள் குறித்து யாழ்ப்பாணத்தில் இரு வாரங்களில் 41 வழக்குகள் பதிவு!

அரிசி விலை கட்டுப்பாடு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் யாழ். மாவட்டத்தில் கடந்த இரண்டு வாரங்களில் 41 வழக்குகள் பதியப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் என்.விஜிதரன் தெரிவித்தார்.

மாவட்ட செயலகத்தில் அரிசி கட்டுப்பாட்டு விலை மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்கள் தொடர்பிலான விசேட கலந்துரையாடலில் நேற்று (20) கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டம் மாத்திரமல்ல, இலங்கை பூராகவும் அரிசி கட்டுப்பாட்டு விலை தொடர்பில் பாரிய பிரச்சினை காணப்படுகின்றது.

அமைச்சரவை மட்டத்தில் இதற்கு ஒரு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டு நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும் என்ற நோக்கில் இது நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அரிசி அதிக விலைக்கு விற்றால் அதாவது அதற்கு அதிக தண்டம் மற்றும் நீதிமன்ற தண்டனை கூட உள்ளது.

மக்களுக்கு குறைந்த விலையில் அரிசி சென்றடைய வேண்டும் என்பதற்காக இந்த மாதத்தில் சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் எமது அதிகார சபையினர் கடமையாற்றி வருகின்றார்கள்.



குறிப்பாக, இந்த மாதத்தில் முதலாம் திகதியிலிருந்து அரிசி சம்பந்தமாக 41வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதிலும் கூடுதலாக கட்டுப்பாட்டு விலை என்று பார்க்கும்போது சிறிய கடைகளை நாங்கள் பெரிதாக பரிசோதிப்பதில்லை.

மொத்த வியாபார நிலையங்கள் அரிசி ஆலைகளை நாங்கள் பரிசோதித்திருக்கின்றோம். அதனடிப்படையில் பெரும்பாலும் ஆட்டக்காரி, மொட்டைகறுப்பன் என்ற அரிசி என்பது வடக்கு மாகாணத்தில் அதிகளவில் காணப்படுகின்றது. அதனை பொறுத்தவரை அதற்கு நிர்ணயம் இல்லை என்ற வகையில் அதற்கு கட்டுப்பாட்டு விலை என்பது நிர்ணயிக்கப்படுவதில்லை.

எனினும், தற்போது வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் அவ்வாறு எந்த விதமாகவும் குறிப்பிடப்படாதுள்ளதோடு சகல அரிசி வகைக்கும் அது பொருந்தும் என்ற ரீதியில் நாங்கள் சகல அரிசியையும் ஒரே விதமாகப் பார்க்க வேண்டியதாகவுள்ளது.

ஆட்டக்காரி அரிசி உற்பத்தியாளர்கள் சரியான விலையினை தமது உற்பத்திப் பொருளில் காட்சிப்படுத்துவதில்லை. யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அரிசி ஆலைகளின் மூன்றுக்கு மேற்பட்ட அரிசி ஆலைகளை பரிசோதித்திருக்கின்றோம். பரிசோதித்து விலை மாற்றம் தொடர்பிலான வழக்குகளை பதிவு செய்திருக்கின்றோம்.

அத்தோடு, அவர்களின் அரிசி இருப்பு விடயங்கள் தொடர்பிலும் ஆராய்ந்திருக்கின்றோம். விலை மாற்றம் தொடர்பில் 2000ரூபா விலை பொறிக்கப்பட்ட 10ஆயிரம் 10கிலோ அரிசி மூட்டைகள் காணப்பட்டமையினால், அத்தோடு விலை மாற்றம் தொடர்பில் மூன்று வழக்குகள் பதிவு செய்திருக்கின்றோம்.

பதுக்கல் தொடர்பில் ஒரு வழக்கு பதியப்பட்டுள்ளது. அத்தோடு கட்டுப்பாட்டு விலையை மீறியோர் 10 பேருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்திருக்கின்றோம். இவை உள்ளடங்களாக அரிசி சம்பந்தமாக 41 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

# மக்களுக்கு உதவி செய்ய புலம்பெயர் தமிழர்கள் தயாராக இருக்க வேண்டும்

## சாணக்கியன் எம்.பி. வேண்டுகோள்



இலங்கையில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் உணவு பஞ்சம் ஏற்படும்போது எம் மக்களுக்கு உதவி செய்வதற்கு புலம்பெயர் தமிழ் மக்கள் தயாராக இருக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

சுவிஸில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நாங்கள் ஜனாதிபதியினை சந்தித்த போது அவரிடம் மிக முக்கியமாக சொன்ன விடயம், வடக்கு, கிழக்கில் பொருளாதார அபிவிருத்தியினை செய்வதற்காக எங்களது புலம்பெயர் தமிழர்கள் உதவி செய்வார்கள். ஆனால், அதற்கு நீங்கள் எங்களுக்கான அரசியல் தீர்வினை தர வேண்டும் என கூறியிருக்கின்றோம்.

ஆனாலும் இந்த விடயத்தில் அரசாங்கம் மௌனம் காக்கின்றது. எனினும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள அரசாங்கத்தினை காப்பாற்ற நாம் முயற்சிப்பதாக சிலர் சமூக வலைத்தளங்களில் விமர்சித்தனர். இன்று எங்களுடைய அரசியலை பொறுத்தவரையில், தமிழர்களுக்கு இரண்டு வகையான அரசியல் பிரச்சினைகள் காணப்படுகின்றன. முதலாவது எங்களது கடந்த கால வரலாறுடன் நாங்கள் எவ்வாறு முகங்கொடுப்பது.

அதாவது 2009ஆம் ஆண்டு இறுதி யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியும், அதற்கு முந்தைய காலப்பகுதியிலும் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்த விடயம், காணி அபகரிப்பு போன்ற விடயங்கள் 2009 இற்கு முதல் இருந்தே தொடர்கின்ற விடயங்கள்.

இவற்றில் எதிர்காலத்தில் எங்களுக்கு இருக்கின்ற விடயங்களை பார்த்தால் அரசியல் தீர்வு என்ற விடயம் எங்களுக்கு மிக மிக முக்கியமான விடயமாக காணப்படுகின்றது. இவற்றை நாம் சமாந்தரமாக கொண்டு செல்ல வேண்டும்.

நாங்கள் தொடர்ச்சியாக ஜனாதிபதியினை சந்தித்து பேசுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், காணி விடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட விடயங்கள் குறித்து பேசி வருகின்றோம். குறிப்பாக பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான போராட்டத்தின்போது நாங்கள் முன்வைத்திருந்த கோரிக்கைகளில் இவையும் உள்ளடங்குகின்றன.

பலரும் கேட்கின்றார்கள் குருந்தூர் மலை விவகாரம் குறித்து ஏன் சாணக்கியன் எதுவும் பேசாமல் மௌனமாக இருக்கின்றார் என்று. நாங்கள் குருந்தூர் மலையினை சென்று பார்வையிட்டுள்ளோம். இந்த விவகாரம் தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனினும், நீதிமன்றத்தின் உத்தரவினையும் மீறி ஜனாதிபதி தனக்குள்ள அதிகாரத்தினை பயன்படுத்தி இவ்வாறான விடயங்களை செய்து வருகின்றார். கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் கிழக்கு மாகாணத்திலுள்ள பல பகுதிகள் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் எங்கெல்லாம் காணி அபகரிப்பிற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றனவோ அங்கெல்லாம் நான் இருந்திருக்கின்றேன். அவற்றினை எதிர்த்திருக்கின்றேன். இனியும் இருப்பேன்.

எங்களுடைய அரசியல் தீர்வின் ஊடாகவே இவற்றினை மாற்றியமைக்க முடியும். எங்களுடைய கைகளில் எங்களுடைய அரசியல் அதிகாரம் இருந்தால் நாங்கள் இதனை மாற்றியமைக்கலாம். எனினும் இது நீண்டகால போராட்டமாக இருக்கின்றது. இலங்கை வரலாற்றில் இதுதான் எங்களுடைய காலமாக இருக்கலாம்.

எங்களது எதிர்காலம் எப்படியாக இருக்க வேண்டும் என சொன்னால் வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் ஒன்றாக வாழ வேண்டும். முஸ்லிம்களிடமிருந்து கிழக்கினை மீட்க வேண்டும் எனக்கூறி நாடாளுமன்றம் வருகை தந்த பிள்ளையானும், வியாழேந்திரனும், நஸீர் அஹமட்டுடன் இணைந்து தற்போது பணியாற்றுகின்றனர்.

எனவே, அரசியல் இலாபங்களுக்காக வாய்களில் வந்த அனைத்தினையும் சொல்லக் கூடாது. நாம் அனைவரும் ஒற்றுமையாக இணைந்து வாழ வேண்டும். அப்படி செய்யாவிட்டால் கிழக்கு மாகாணம் தமிழ் மக்களுக்கும் இருக்காது முஸ்லிம் மக்களுக்கும் இருக்காது எனக் குறிப்பிட்டுள்ளார்.

# ஆர்.ரி.ஐ. மூலம் ஊழல், முறைகேடுகளை வெளிப்படுத்திய ஊடகவியலாளருக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு

(மு.தமிழ்ச்செல்வன்)

கிளிநொச்சியில் உள்ள ஒரு முன்னணி பாடசாலையில் இடம்பெற்ற ஊழல், முறைகேடுகளை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் ஆவணங்களுடன் பெற்று அதனை வெளிப்படுத்திய ஊடகவியலாளருக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வாரம் குறித்த பாடசாலையின் அபிவிருத்திக் குழு தீர்மானம் மேற்கொண்டு முறைப்பாடு செய்யப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலையின் அதிபரால் மேற்கொள்ளப்பட்ட ஊழல், முறைகேடுகள் தொடர்பில் தகவல் அறியும் சட்டத்தின் மூலம் கணக்காய்வு



அறிக்கை உள்ளிட்ட ஆவணங்களை பெற்றுக் கொண்ட ஊடகவியலாளர் அதனை சமூகவலைத்தளம் மூலம் வெளிப்படுத்தியதோடு, நடைபெற்ற ஊழல், முறைகேடுகள் தொடர்பில் உரிய திணைக்களம் நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை எனவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த நிலையில் தனது ஊழல், முறைகேடுகள் தொடர்பான ஆவணங்கள் பொதுவெளியில் வெளிவருவதனை தடுக்கும் நோக்கில் பாடசாலை அபிவிருத்திக் குழுவினை கூட்டி கடந்த காலத்தில் இடம்பெற்ற ஊழல் முறைகேடுகளை இப்பொழுது வெளியிடுவதாக ஊடகவியலாளர் மீது குற்றம் சுமத்தப்பட்டு ஆவணங்கள் வெளியிடப்படுவதனை தடுக்குமாறும் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பாடசாலை அதிபரால் பொலிஸாரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இருப்பினும், ஆதாரங்களாக ஆவணங்களுடன் முறைகேடுகளை வெளிப்படுத்தியதன் காரணமாக தம்மால் இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது எனத் தெரிவித்த கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யுமாறு பாடசாலை அபிவிருத்திக் குழுவினருக்கு கூறியுள்ளார்.

# அரச வருமானத்தில் பங்களிப்புச் செய்யும் நிறுவனங்களில் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது அவசியம்

## கோபா குழு வலியுறுத்து





இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் மற்றும் அரச வருமானத்தில் அதிக பங்களிப்பை வழங்கும் நிறுவனங்களில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது தொடர்பில் கோபா குழுவில் கவனம் செலுத்தப்பட்டது.

அரசாங்க கணக்குகள் பற்றிய (கோபா) குழு நாடாளுமன்ற உறுப்பினர் லசந்த அலகியவண்ண தலைமையில் அண்மையில் நாடாளுமன்றத்தில் கூடிய போதே இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. இந்தக் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண என்பது குறிப்பிடத்தக்கது.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு, இலங்கை மதுவரித் திணைக்களம், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம், இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் மற்றும் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் (ICTA) ஆகிய நிறுவனங்களின் அதிகாரிகள் இந்தக் குழுக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இதன்போது ICTA நிறுவனத்தினால் இந்த நிறுவனங்களுக்கு அவசியமான மென்பொருட்களை தயாரித்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் அனுமதிப்பத்திரம் வழங்குதலுடன் தொடர்புபட்ட நிறுவனங்களை ஒன்றிணைக்கும் கணினி வேலைத்திட்டம் மற்றும் வருமான முகாமைத்துவ வலையமைப்பை உருவாக்கும் பணிகளில் ICTA நிறுவனத்தின் ஈடுபாடு தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் பிரதானமாக கவனம் செலுத்தப்பட்டது.

இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் அனுமதிப்பத்திரம் வழங்குதலுடன் தொடர்புபட்ட நிறுவனங்களை ஒன்றிணைக்கும் கணினி வேலைத்திட்டம் 2015 இல் ஆரம்பிக்கப்பட்டு இதுவரை வெற்றிகரமற்ற நிலையில் காணப்படுகின்றமை தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்த முன்பொருளைத் தயாரிப்பதில் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் (ICTA) செயற்பாடு தொடர்பில் திருப்தியடைய முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் லசந்த அலகியவண்ண சுட்டிக்காட்டினார். அரச நிறுவனங்களுக்கு கணினி வேலைத்திட்டங்களை உருவாக்குவது தொடர்பில் போதிய அறிவு இல்லை என்பதால் ICTA நிறுவனத்தின் உதவியைக் கோரும்போது அது தொடர்பில் உரிய தலையீட்டை அல்லது உதவியை வழங்குவதற்கு இந்நிறுவனம் நடவடிக்கை எடுப்பதில்லை என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். மேலும், அரச நிறுவனங்களை தகவல் தொழில்நுட்பத்துடன் இணைத்து புதிய தொழில்நுட்பத்துடன் இணைக்கும் பொறுப்பு இந்த நிறுவனத்திற்கு உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அதேபோன்று, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் தொடர்புபட்ட வரி அறவிடும் அனைத்து அரச நிறுவனங்களையும் ஒன்றிணைக்கும் கணினி வலையமைப்பை (RAMIS) சரியான முறையில் தயாரிக்க முடியாமை குறித்தும் குழுவில் கலந்துரையாடப்பட்டது.

அதற்கு மேலதிகமாக, இலங்கை மதுவரித் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து ICTA நிறுவனம் தயாரிக்கும் வேலைத்திட்டம் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இதற்கமைய இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தினால் (ICTA) அரச நிறுவனங்களுக்கு தயாரிக்கப்பட்ட மென்பொருட்கள், ஆலோசனை வழங்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலைமை தொடர்பில் அறிக்கையொன்றை ஜூலை முதலாம் திகதிக்கு வழங்குமாறு கோபா குழு அந்நிறுவனத்துக்கு பரிந்துரை வழங்கியது.

இந்தக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான (வைத்திய கலாநிதி) சுதர்ஷனி பர்னாந்துபுள்ளே, திஸ்ஸ அத்தநாயக்க, மொஹமட் முஸம்மில், துமிந்த திசாநாயக்க, நிரோஷன் பெரேரா, (வைத்திய கலாநிதி) உபுல் கலப்பத்தி மற்றும் வீரசுமன வீரசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ரணில் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக வரவில்லை

## போராட்டத்தை அடக்கவே பிரதமராகியுள்ளதாக ஜே.வி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சுட்டிக்காட்டு




காலிமுகத்திடலில் 'கோட்டா கோ கம' போராட்டத்தை பாதுகாப்போம் எனக் கூறிய பிரதமர் இன்று அதனை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளாரென மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திர சேகரன் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் நேற்று (20) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

ரணில் விக்ரமசிங்க பிரச்சினையைத் தீர்ப்பதற்காக வரவில்லை. பிரச்சினையை வளர்ப்பதற்காகவே வந்துள்ளார். வரிசை யுகமே தற்போது காணப்படுகிறது. உரம் இல்லாததால் விவசாயத்துறை முழுமையாக செயலிழந்துள்ளது. பொருட்களின் விலை அதிகரிப்பின் காரணமாக தட்டுப்பாட்டினாலும் மக்கள் பட்டினிச் சாவினை எதிர்கொள்கின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

காலிமுகத்திடலில் கோட்டா கோ கம போராட்டத்தை பாதுகாப்போம் எனக் கூறிய பிரதமர் இன்று அதனை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார். அந்த வகையில் போராட்டத்தில் ஈடுபட்ட முக்கிய நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மக்கள் பிரச்சினையைத் தீர்க்க முடியாத உணர்ச்சியற்ற ஜடங்களாக உள்ள கோட்டாபய அரசாங்கத்தை விரட்டியடிக்க இலங்கையில் உள்ள மக்கள் ஓரணியில் திரள வேண்டும் என்றார்.


# பகிரங்க ஏல விற்பனை

எமது சேவை மையங்களில் அடகுவைக்கப்பட்டு ஒப்பந்தக்காலம் முடிவடைந்தும், மீட்கப்படாத தங்க நகைகள் 2022 ஜூன் மாதம் 25 ஆம் திகதி காலை 9.30 மணியிலிருந்து மாலை 2.30 மணி வரை எமது நகர காரியாலயத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

COMMERCIAL CREDIT

முகாமையாளர்
கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி
நகர காரியாலயம்
இல. 165, கின்சி வீதி
கொழும்பு 08


# வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் - நீதியமைச்சர் விஜேதாசவுக்கும் இடையில் சந்திப்பு

வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் மற்றும் நீதி, சிறைச்சாலைகள் நடவடிக்கைகள் மற்றும் அரசியலமைப்புத் திருத்த அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜேதாச ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை கட்டியெழுப்ப முடிந்த வழிமுறைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன் அதற்காக இலங்கையின் பொருளாதாரத்துக்கு வழங்கும் செயற்பாடுகளை வர்த்தக சமூகத்தினர் என்ற அடிப்படையில் நாடு சந்தித்துள்ள நிலைமையிலிருந்து நாட்டை மீட்க முடிந்த சகல விடயங்களையும் நிறைவேற்ற முடியுமென வர்த்தகச் சங்கப் பிரதிநிதிகள் இதன்போது தெரிவித்துள்ளனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் தட்டுப்பாட்டை தீர்த்துக்கொண்டு நாட்டை முன்னெடுத்துச்செல்ல வேண்டுமெனில் நாட்டுக்கு டொலரை எடுத்துவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், முடிந்தளவு தமது சங்கத்திடமிருந்து உதவிகளை பெற்றுக் கொள்ளுமாறும் அவர்கள் அமைச்சரிடம் கோரியுள்ளனர். இதுகுறித்து தமது சங்கம் பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடியுள்ளதாகவும் ஆனால் அதுகுறித்த பதில் எதுவும் தமக்கு கிடைக்கவில்லை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதற்கு பதிலளித்த அமைச்சர், இது தொடர்பில் பொறுப்புடைய பிரிவினருடன் கலந்துரையாடி சரியான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை கட்டியெழுப்புவதற்காக வர்த்தக சங்கப் பிரதிநிதிகளுக்கு பாரிய பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# கைக்குண்டுகள் மீட்பு

(அநுராதபுரம் செய்தியாளர்)

திறப்பனை உலகல்ல பகுதியிலுள்ள நபரொருவருக்கு சொந்தமான காணியொன்றிலிருந்து இரண்டு கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காணி உரிமையாளரினால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து, 18ஆம் திகதி மாலை சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் துருப்பிடித்திருந்த நிலையில் காணப்பட்ட இரண்டு கைக்குண்டுகளை கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக அநுராதபுரம் நீதிமன்றில் அறிவித்து பெற்றுக் கொள்ளப்பட்ட அனுமதியின் பிரகாரம் விசேட பொலிஸ் அதிரடிப் படையினரை சம்பவ இடத்துக்கு வரவழைத்து இரண்டு கைக்குண்டுகளையும் செயலிழக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என திறப்பனை பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திறப்பனை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

நாட்டில் எரிபொருள், எரிவாயு தட்டுப்பாடு காரணமாக நீண்ட வரிசைகளில் நிற்கும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இவ்வாறு வரிசைகளில் நிற்போரில் நேற்றுமுன்தினம் வரை 13 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கைத் தேசம் இப்படியொரு இக்கட்டான சூழ்நிலைக்கு முகங்கொடுக்குமென எதிர்பார்த்திராத நிலையில், அப்பாவி உயிர்களின் மரணங்கள் மனதை மேலும் இறுக்கமாக்குகின்றன.

தன் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக தொழிலுக்குச் சென்ற இளைஞன் ஒருவன், 150 ரூபா பணம் இல்லாததன் காரணமாக ரயிலில் பயணிக்க நேரிட்டு உயிரிழந்த சம்பவம் மாத்தறையில் பதிவாகியிருந்தது.

சந்தருவான் என்ற 23 வயதுடைய இளைஞனே இச்சம்பவத்தில் பரிதாபமாக உயிரிழந்துள்ளான். பஸ்களின் எண்ணிக்கை குறைவு என்பதாலும் ஒப்பீட்டு ரீதியில் ரயில் கட்டணங்கள் அதிகமில்லை என்ற காரணத்தினாலும் புகையிரதங்களில் எல்லைமீறிய நிலையில் பொதுமக்கள் பயணங்களை மேற்கொள்கின்றனர்.

இந்த இளைஞனும் அவ்வாறு மிக நெருக்கமாக ரயில் மிதிபலகையில் சென்றுள்ளான். அதுவே அவனது இறுதிப் பயணமாயிற்று.

வத்தேகம, பொல்கொல்ல மீகம்மனவத்தவில் 35 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவமும் அப்பகுதியில் பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. லொறியொன்றில் சிறு வர்த்தக முயற்சிகளில் ஈடுபட்டுவந்த இளைஞனுக்கு நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக வாகன குத்தகை பணத்தை மூன்று மாதங்களாக செலுத்த முடியாமற்போயுள்ளது.

இந்நிலையில், குத்தகை நிறுவனத்தைச் சேர்ந்தோர், அந்த வாகனத்தை எடுத்துச்செல்வதற்காக இளைஞனின் வீட்டுக்குச் சென்றுள்ளனர். தனது நிலை, வருமானமின்மை குறித்து அவர்களுக்கு எவ்வளவு எடுத்துச்சொல்லியும் கேட்கவில்லை. வாகனத்தை எடுத்துச்சென்று சில நிமிடங்களில் அந்த இளைஞன் அவ்விடத்திலேயே வீழ்ந்து உயிரிழந்துள்ளான்.

மீகம்மனவத்தவைச் சேர்ந்த ஜாலிய குமார என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, களனி கங்கையில் தனது ஐந்து வயதுக் குழந்தையை

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2022, ஜூன் 21ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை**

# மரணங்கள் தொடரக்கூடாது

வீசிய தாய், மன அழுத்தமே இவ்வாறு நடந்துகொள்வதற்குக் காரணம் என வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

தந்தையும் மகனும் எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக வெவ்வேறு வரிசைகளில் இருந்தபோது முச்சக்கரவண்டியில் காத்திருந்த தந்தை உயிரிழந்துள்ளார். அங்கே, அருகிலேயே காத்திருந்த மகனின் மன ஏக்கம், அழுகை சமூக வலைத்தளங்களில் பரவியது.

உண்மையில், அந்த வேதனையை வெறும் சொற்களில் அடக்கிவிட முடியாது.

மாலிபொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 09 மாத கைக் குழந்தைக்கு விஷம் கொடுத்துவிட்டு தாய் தப்பிச் சென்றுள்ளார். அயலவர்களின் உதவியுடன் குழந்தை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதிலும் உயிர்பிழைக்க வாய்ப்பில்லையென வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

எல்கிரிய, கந்தஹேனவைச் சேர்ந்த வீரதுங்க ஆராச்சிகே பசிந்து பிரபாத் என்ற குழந்தையே இந்தத் துயரமான மரணத்தை எதிர்நோக்கியுள்ளது.

இவ்வாறான சம்பவங்களைக் காண்பதற்கும் கேள்வியுறுவதற்கும் மனம் இடம்கொடுப்பதில்லை. ஆட்சியாளர்கள் மக்களை பெரும் சுமைக்கும் மன அழுத்தத்துக்கும் ஆளாக்கியுள்ளார்கள்.

நாடு முழுவதும் எரிபொருளுக்கும் எரிவாயுவுக்கும் நீண்ட வரிசைகளில் மக்கள் காத்திருக்கிறார்கள். அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

எங்கு பார்த்தாலும் என்ன பொருளென்றாலும் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன. அரச கட்டுப்பாட்டு விலை என்பது வெறும் தாள்களில் எழுதப்பட்டதாக பயனற்றுப்போயிருக்கின்றன.

இவ்வாறான கடுமையான நாட்கள் நீளுமாக இருந்தால் மேலும் உயிரிழப்புகளும் அதிகரிக்கும் என்பதுதான் உண்மை.

மக்கள் மன விரக்தியில் இருக்கிறார்கள். பசிக்கு எந்த பாஷையும் புரியாது என்று சொல்வார்கள். இங்கே, பொறுமை, கனிவு, விட்டுக்கொடுப்பு என எதற்குமே இடங்கொடுக்காதவாறு வரிசையில் நிற்போரின் பசியும் அவர்களைச் சார்ந்தோரின் பசியும் கோபத்தை ஏற்படுத்துகின்றன.

ஆகையால், அவர்கள் தங்களுடைய நிலையிலிருந்து மீறவேண்டிய கட்டாயச் சூழலுக்கு தள்ளப்படுகிறார்கள். இதற்கு பொதுமக்களை குறை கூறிப் பயனில்லை.

இந்த நிலைமை ஏற்படுமென அறிந்தும் ஆட்சியாளர்கள் தங்களது பதவிகளை தக்கவைத்துக்கொள்ளவே பிரயத்தனம் மேற்கொண்டார்களே தவிர, இந்த வேதனையும் பசியும் எல்லோருக்கும் பொதுவானதென அவர்கள் நினைக்கவில்லை.

பட்டினிச்சாவுக்கு வழிவகுத்துவிட்டு அறிக்கைவிடும் அரசியல்வாதிகளை தெரிவுசெய்தமைக்காக நாம் வெட்கப்பட வேண்டும். இந்த நிலைமை தொடராதிருக்க இறைவனை பிரார்த்திப்போம்.

# உறவுகளைப் பேணுவோம்...



மனித உறவு என்பது உடன்பிறந்தோர், தந்தை தாயுடன் உடன்பிறந்தோர், மனைவியுடன் உடன் பிறந்தோர் என பல கிளைகளாக விரிந்துகொண்டே இருக்கிறது. ஒரு மரம் எப்படி புதிதுபுதிதாய் தினம் தினம் துளிர்விட்டுக்கொண்டே இருக்கிறதோ அதுபோல் உறவுகளும் புதிதுபுதிதாய் விரிந்து கொண்டே இருக்கின்றன.

புதிய உறவுகளுக்கு இருக்கும் மரியாதை பழைய உறவுகளுக்கு இருப்பதில்லை. பழைய உறவுகள் சருகுகள்போல் உதிர்ந்து கொண்டே இருக்கின்றன. உண்மையில் பழைய உறவுகள் தாம் நமது ஆணிவேர்கள். ஆனால், யாரும் மறைவாக இருக்கும் வேர்களை நேசிப்பதில்லை. புதிதாய் மிளிரும் தளிர்களையே அதிகம் விரும்புகிறோம்.

தாய், தந்தை, சகோதரன், சகோதரி, மைத்துனன் இப்படி தவிர்க்க முடியாத உறவுகளில் கூட இன்று விரிசல் விழுந்து கொண்டே இருக்கிறது. முன்பெல்லாம் உறவுகள் பாசத்தாலும், உணர்வாலும் பின்னப்பட்டிருந்தன. இப்போது அவை பணத்தால், பதவியால்தான் என்கிற அகங்காரத்தால் அறுபட்டுக் கிடக்கின்றன.

ஒன்றுக்கும் மேற்பட்ட சகோதர சகோதரிகள் உள்ள குடும்பங்களில் அவரவர்களின் பொருளாதார நிலைக்கு ஏற்பவே அவர்களது உறவு நிலைத்து நிற்கிறது. எவ்வளவு நல்லவராக இருந்தாலும் வறுமையில் வாடும் உடன்பிறந்தார் மதிக்கப்படுவதில்லை. இருவரின் வருமானமும் ஒரேமாதிரியாக இருந்தால் மட்டுமே அவர்கள் ஒருவரையொருவர் சமமாக நேசிக்கிறார்கள். அவ்வாறு இல்லாதபோது வசதியற்றவர் மீதான பற்றுதல் குறைகிறது.

ஒருதாய் வயிற்றுக் குழந்தைகளாக வளர்கிறபோது வாஞ்சையுடன் ஒருவரையொருவர் கொஞ்சிக் கொள்வதும், தூக்கிச் சுமப்பதும் கண்கொள்ளாக் காட்சிகளாகும். ஆனால், அந்தக் குழந்தைகள் வளர வளர நேசம், பாசம் குறைய ஆரம்பித்துவிடுகிறது.

செடி வளர்ந்த பின் மரம் என்று அழைப்பதுபோல், அதே குழந்தைகள், சகோதரன் என்ற வார்த்தை மாறி பங்காளியாகப் பரிணமிக்கிறபோது, பகையாளிகளாக மாறிவிடுகிற அவலம் நடந்தேறுகிறது. சில வீடுகளில் புதிதாக வரும் மனைவியும் அவர் வழி வருகிற உறவுகளும் கணவனின் பழைய உறவுகளைத் துண்டிப்பதும் உண்டு.

முன்பு சகோதரன், சகோதரியை மட்டுமல்ல, பெரியப்பா, சித்தப்பா, பெரியம்மா, சின்னம்மா பெற்ற பிள்ளைகளையும் உடன்பிறந்தார்போல் பாவித்தோம். இப்போது நம் உடன்பிறந்தோரையே அவ்வாறு பாவிக்கிறோமா?

சகோதர உறவுகளிலோ மற்ற உறவுகளிலோ பதவியாலோ, பணத்தாலோ உயர்வாக இருக்கும் மனிதர்தான் உறவுக்கூட்டத்துக்கு தலைவராக மதிக்கப்படுகிறார். அவர் இளையவராக இருப்பினும், மூத்தவராக இருப்பினும் அவர் சொல்வதையே மற்றவர்கள் கேட்க வேண்டும்.

வசதியாக இருக்கும் அந்த மனிதரின் ஒரே தகுதி பணம் அல்லது பதவி மட்டும்தான். அதே கூட்டத்தில் அறிவாளியாக, ஒழுக்கவாதியாக இருப்பவன் ஏழையாக இருக்கும் பட்சத்தில் அவன், அந்தத் தலைவனின் அதட்டலுக்கும், மிரட்டலுக்கும், கட்டளைக்கும் கீழ்ப்படிந்துதான் போகவேண்டும்.

அவன் அனுசரித்துப் போகாவிடில் அவன் உறவு வட்டத்திலிருந்து தூக்கி எறியப்படுவான். அந்த ஏழைக்கு அதிகமான சகிப்புத் தன்மை இருக்கவேண்டும். அந்த பணக்காரருக்கு தான் செல்வந்தனாக இருப்பதற்கு தனது திறமையே காரணம் என்கிற அசட்டுத்தனமான அகங்காரம் இருக்கும்.

உறவு வட்டத்தில் இருப்பவரில் ஒருவர் ஏழையாக இருப்பினும் அவருக்கும் மற்றவர்களுக்கு இருக்கும் எல்லா உணர்வும் இருக்கும் என்பதை அறிந்து பிறர் அவருக்குரிய மரியாதையை கொடுக்க வேண்டும்.

பிறர் மனதைப் புண்படுத்தாமல் நடந்துகொள்வது என்பது மிகவும் இன்றிமையாத ஒன்றாகும். நாம் அதிகமாக பணம் சம்பாதிக்கிறோம், உயர்ந்த பதவியில் இருக்கிறோம் என்கிற மமதையில் நாம் நமது உறவினர்களிடம் மமதையாக நடந்து கொள்வது அநாகரிகமானது.

அவர்களுக்குப் பொருளுதவி செய்ய உங்களுக்கு மனமில்லாவிட்டாலும் பரவாயில்லை. உங்களுக்கும் அவருக்குமான அந்த இரத்த உறவுக்கு மரியாதை கொடுங்கள். மகாபாரத்தில் பாண்டவர்கள் எவ்வளவு துன்பம் நேர்ந்தபோதும் தனது மூத்த சகோதரன் தருமரிடம் வைத்த மரியாதையை சிறிதும் குறைக்கவில்லை. அந்த மரியாதையால்தான் ஐவராக இருந்தும் நூறுபேரை வெல்ல முடிந்தது.

வாழ்க்கையை நகர்த்தும் உந்துசக்தியே புரிதல்தான். அது கணவன் - மனைவியாக இருந்தாலும் சரி, அப்பா - பிள்ளை, அண்ணன் - தம்பி என எந்த உறவானாலும் புரிதல் அவசியம். புரிதல் மட்டும் வலிமையாக இருந்தால் வாழ்க்கை வரமாகும். தவறான புரிதல் ஏற்படுமாயின், தொட்டதற்கெல்லாம் பிரச்சினைதான்.

உறவு கண்ணாடிப் பொருள் போன்றது. அது கைதவறி விழுந்தால் சுக்கு நூறாக உடைந்து விடும். பிறகு அதை ஒட்டவைப்பதென்பது இயலாத காரியம். எந்த விதத்திலும் குறையில்லாத நிறை மனிதன் ஒருவனைக் காட்டுவதென்பது அரிது.

புகழ்பெற்ற அறிஞர்கள், மகான்களிடம் கூட இந்தச் சமூகம் ஏதாவது ஒரு குறையை கண்டுபிடித்து தண்டோரா போடுகிறது. அவர்களுக்கே இந்த கதியெனில் சாதாரண மனிதாகளாகிய நம் கதி என்ன?

இன்றைய அவசர உலகில் உறவுகளிடம் உட்கார்ந்து பேசக்கூட பலருக்கும் நேரமிருப்பதில்லை. எல்லாவற்றையும், நட்பு தொடங்கி பகை வரை கைபேசி வழியே பேசி முடித்துக் கொள்கிறோம். நல்ல விடயங்களைக் கூட பிறரிடம் நேரில் கூறி மகிழ முடியாமல் ஓடிக்கொண்டிருக்கிறோம். நமக்கு அருகில் இருக்கிற உறவுகளைக்கூட மாதம் ஒரு தடவை சந்திப்பதென்பது அரிதாக இருக்கிறது.

மரத்தடியில், குளக்கரையில், குழாயடியில் பேசியது எல்லாவற்றையும் இப்போது கைபேசியே பார்த்துக்கொள்கிறது. நாளுக்கு நாள் உறவுகளின் அடர்த்தி குறைந்துகொண்டே வருகிறது. உறவினர்களிடம் அன்பை பிச்சையெடுக்க வேண்டியதாக இருக்கிறது.

உறவு வட்டம் பெரிதாகஇருக்கும் குடும்பங்களில் மகிழ்ச்சியும், மனநிறைவும் தானாகவே வந்து குடியேறுகிறது. மாறாக, உறவை ஒதுக்கும் குடும்பங்களில் மனஉளைச்சலும், பதற்றமுமே காணப்படுகின்றன. எனவே, உறவுகளைப் பேணுவோம்; மகிழ்ச்சியும், மனநிறைவும் பெறுவோம்!

**இரா. பொன்னாண்டான்**

# சீக்கியர்களின் காலிஸ்தான் தனிநாட்டுக் கோரிக்கை வெற்றிபெறுமா?

மக்களிடையே தனிநாட்டுக் கோரிக்கை என்பது தமது தேசியத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடைந்து வருகின்ற காலகட்டத்திலேயே இந்தியாவிலும் பல்வேறு மாநிலங்களில் வசிக்கும் இனங்கள் தங்களுக்கான தனிநாட்டுக் கோரிக்கையை மேற்கொண்டு வருவதை காணக்கூடியதாக இருக்கின்றது. இந்தியாவானது ஓர் அரைகுறை சமஸ்டி ஆட்சி நாடாக காணப்படுவதுடன், இங்கு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் காணப்படுகின்றன. இந்தியாவில் சமஸ்டியானது இனங்களை அடிப்படையாகக்கொண்டு வகை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதோர் அம்சமாகும். அந்த வகையில் தமிழர்களுக்கு என்று தமிழ்நாட்டு மாநிலமும் தெலுங்கர்களுக்கென்று தெலுங்கான மாநிலமும் வழங்கப் பட்டுள்ளது. இவ்வாறு சில மாநிலங்களில் வசிக்கும் இனத்தவர்கள் தங்களுக்கு இந்தியாவிலேயே தனிநாடு கோரி போராட்டங்களை மேற்கொண்டு வருவதைக் காணலாம். அதில் தெலுங்கானா மக்களின் தனிநாட்டுக் கோரிக்கையை குறிப்பிட முடியும். அதேபோன்று காலிஸ்தான் தனிநாட்டுக் கோரிக்கையைக் காணலாம். இக்கோரிக்கை இன்று நேற்று ஆரம்பமானதோர் அம்சம் அல்ல. அது இந்திரா காந்தியின் கொலையுடன் தொடர்புடைய ஓர் அம்சமாக காணப்படுகின்றது.

ஏனெனில், சீக்கியர்கள் தனிநாட்டுக் கோரிக்கையை ஆரம்பித்தது தங்களுக்கென்று சுயாதீனமான அரசு அமைய வேண்டும் என்பதே அவர்களுடைய நோக்கமாக காணப்படுகின்றது.

சீக்கியர்களுக்கு தனிநாடாக அங்கீகரிக்கக் கோரி பஞ்சாப் ஹரியானா மற்றும் ஹிமாச்சல் பிரதேசத்தில் அடுத்தவரிடம் இடம்பெற இருக்கின்ற இந்திய குடியரசு தினத்தன்று இதற்கான வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று கூறப்படுகின்றது. இவ்விடயத்தினை தடை செய்யப்பட்ட அமைப்பான சீக்கியர்களுக்கான நீதி அமைப்பின் நிறுவுனர் குர்பத்வந் சிங் பன்னு குறிப்பிட்டுள்ளார்.

இந்த வாக்கெடுப்பு அடுத்த வருடம் ஜனவரி மாதம் 26ஆம் திகதி இந்திய குடியரசு தினத்தன்று நடத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். காணொளி மூலமாக லாகூர் பிரஸ் கிளப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்விடயத்தை தெரிவித்திருந்தார். அதில் காலிஸ்தானின் தலைநகராக சிம்லா இருக்கும் என்றும் அவர் அறிவித்துள்ளார். இது இந்தியாவிலிருந்து காலிஸ்தான் விடுவிக்க நடத்தப்படும் வாக்கெடுப்பு என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சீக்கியர்களின் தனிநாட்டுக் கோரிக்கை 1982ஆம் ஆண்டு பிந்திரன்வாலே தலைமையில் பொற்கோயிலை தலைமையாகக் கொண்டு பஞ்சாபில் போராட்டத்தை நடத்தி வந்தனர். இது பஞ்சாபியர்களின் பிரதானமானதொரு வழிபாட்டுத்தலமாக காணப்படுகின்றது. பஞ்சாபியர்கள் தனிநாட்டுக் கோரிக்கை தொடர்பில் இந்திய அரசாங்கத்திற்கும் காலிஸ்தான் விடுதலை இயக்கத்துக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்ததையடுத்து அன்றைய இந்தியப் பிரதமராக விளங்கிய இந்திரா காந்தி ஆபரேஷன் ப்ளு ஸ்டார் ( bluestar ) என்ற இராணுவ நடவடிக்கையை பொற்கோயில் மீது தொடுத்து காலிஸ்தான் தனிநாட்டுக் கோரிக்கையை முற்றிலுமாக அழித்தார்.

ஆனால், அதனுடன் இந்தியாவில் பஞ்சாபியர்களின் காலிஸ்தான் தனிநாட்டுக் கோரிக்கை இல்லாமல் போய்விட்டது என்று பலரும் கருதினாலும் இன்றுவரைக்கும் பஞ்சாபியர்கள் தங்களுடைய தனிநாட்டுக் கோரிக்கை தொடர்பாக கவனத்துடன் செயற்பட்டு வருவதை காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த காலிஸ்தான் தனிநாட்டுக் கோரிக்கையில் பங்கேற்க 27 மில்லியன் சீக்கியர்கள் தகுதிபெற்றுள்ளார்கள் என்றும் காஷ்மீரின் சுதந்திரத்திற்கு இந்திய பஞ்சாபின் சுதந்திரம் முக்கியம் என்றும் விடுதலை இயக்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த பஞ்சாபியர்கள் தங்களுடைய தனிநாட்டுக் கோரிக்கைக்கு பாகிஸ்தானின் உதவியையும் நாடி நிற்பதை காணக் கூடியதாக இருக்கின்றது. காலிஸ்தான் என்னும் தனிநாடு உருவாகிய பின் இதுவரை காலமும் சீக்கியர்களை துன்புறுத்தியவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டனை வழங்குவதற்காக நீதிமன்றம் முன் நிறுத்தப்படுவார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

தனிநாட்டுக் கோரிக்கையை மையமாகக் கொண்டு சீக்கியர்களின் பொற்கோயிலில் இந்திரா காந்தி தாக்குதல் மேற்கொண்டமையால் இந்திரா காந்தியை பழி வாங்குவதற்காக அவருடைய மெய்ப்பாதுகாவலர்கள் பிபின் சிங் மற்றும் சத்வத்தின் ஆகியோர் அவரை படுகொலை செய்தனர். இந்தப் படுகொலையும் 1984 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி அவர்களுடைய பிரதமர் வாசஸ்தலத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. அதேநேரம் இந்த ஆபரேஷன் ப்ளு ஸ்டார் என்ற இராணுவ நடவடிக்கையை மேற்கொண்ட ஓய்வுபெற்ற இராணுவத் தளபதி கே.எஸ். கிராத் 2012ஆம் ஆண்டு இருபத்தியெட்டு வருடங்கள் கழித்து லண்டனில் வைத்து சீக்கியர் இருவரால் தாக்கப்பட்டார். இவர் தாக்கப்படும்போது எழுபத்தியெட்டு வருடங்களாக காணப்பட்டதுடன், அந்தச் சம்பவம் இடம்பெற்று இருபத்தியெட்டு வருடங்கள் கழித்து தாக்கப்பட்டது சீக்கியர்கள் தங்களுடைய தனிநாட்டுக் கோரிக்கை தொடர்பாக கவனத்துடன் செயற்பட்டு வருவதை காணக்கூடியதாக இருக்கின்றது.

இந்தியாவில் காலத்திற்கு காலம் இவ்வாறான தனிநாட்டுக் கோரிக்கை இடம்பெற்று வருவது தவிர்க்க முடியாத ஒரு விடயமாகக் காணப்பட்டாலும் இந்த பஞ்சாபியர்களின் காலிஸ்தான் என்னும் தனிநாட்டுக்கான கோரிக்கை வலுவடைந்து வருவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆனால், இந்தியாவின் சங்கத்திலிருந்து பிரிந்து காலிஸ்தான் தனிநாடாக மாறும் என்பது குறித்து நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

**சி.குகதாசன்**
**அரசறிவியல்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

## இன்றைய நாளில்...

- 1736 – இலங்கையில் உள்ளூர் மொழிகளில் நூல்கள் அச்சிட அச்சியந்திரசாலையை ஒல்லாந்தர் நிறுவினர்.
- 1930 – பிரான்ஸில் இராணுவத்துக்கு கட்டாய ஆட்சேர்ப்பு ஓராண்டுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டது.
- 1990 – மன்னாரில் கொண்டச்சி இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது.
- 2002 – உலக சுகாதார நிறுவனம் ஐரோப்பாவை போலியோ நோய் அற்ற கண்டமாக அறிவித்தது.
- 2004 – முதலாவது தனியார் விண்ணூர்தி ஸ்பேஸ்சிப்வன் மனித விண்வெளிப் பறப்பை மேற்கொண்டது.
- 2006 – புளூட்டோவின் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு துணைக் கோள்களுக்கு நிக்ஸ், ஹைட்ரா எனப் பெயரிடப்பட்டது.

## நக்கல் நமசிவாயம்

*சின்னதா ஒரு கேக் வெட்டித்தானும் பேர்த்டேய கொண்டாட முடியேல்ல.. கேட்டா நிறைவேற்று அதிகாரம் கொண்ட பதவி... நானா இருந்தா தூக்கி வீசிப்போட்டு போயிருப்பன் கண்டியளோ..*



# வரம்பை மீறி அரசாங்கத்தின் செலவுகள் அதிகரிப்பு!

## இடைக்கால வரவு-செலவுத் திட்டத்திலாவது விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்கும் என்கிறார் அமைச்சர் மஹிந்த அமரவீர



அரசாங்கத்தால் சமர்க்கப்பட்ட வரவு-செலவுத் திட்ட யோசனையின் வரம்பை மீறி செலவுகள் அதிகரித்துள்ளன. அதனை ஈடுசெய்வதற்கான நிதியும் எம்மிடம் இல்லை. எவ்வாறாயினும் இடைக்கால வரவு-செலவுத்திட்ட யோசனையினூடாக சரியும் விவசாயிகளுக்கான நிவாரணத்தை பெற்றுக் கொடுக்க எதிர்பார்க்கின்றோம் - என கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

விவசாயிகளுக்கு நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்குமாறு கோரி அமைச்சரவைப் பத்திரமொன்று இதற்கு முன்னரே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் அதற்கான நிதி நெறிமுறைகள் எம்மிடம் இல்லை. நிதியும் இல்லை. எம்மால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்ட யோசனைக்கும் அதிகமாக செலவு ஏற்பட்டுள்ளது.

அதனால், எதிர்வரும் இடைக்கால வரவு-செலவுத்திட்டத்தில் விவசாயிகளுக்கென நிதி ஒதுக்கீடு செய்யுமாறு நானும் கோரிக்கை முன்வைத்துள்ளேன். 12 - 15 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்ய நேரிடும். அந்தத் தொகை கிடைத்தால் அந்த நிதியை மக்களுக்கு பெற்றுக்கொடுக்க எதிர்பார்த்துள்ளோம்.

மக்களிடமிருந்து எங்களுக்கு ஒத்துழைப்பு கிடைக்கிறது. ஆனால், உரம் தொடர்பில் ஒருசில அரசியல் கட்சிகளைச் சார்ந்த விவசாய சங்கங்கள் பெரும் குழப்பமடைந்துள்ளன. பயிரிடும் விவசாயிகள் தொடர்பிலும் அவர்கள் அதிருப்தியில் இருக்கிறார்கள். திட்டமிட்டு எமது வேலைத்திட்டங்களை முறியடிக்க முயற்சிக்கிறார்கள்.

எதிர்காலத்திலும் இந்த சவால்களை எதிர்கொள்ளவேண்டிய கட்டாய நிலை இருக்கிறதென்பது எமக்குத் தெரியும். எதிர்த்தரப்பில் அனைவரும் அவ்வாறு செயற்படுகிறார்கள் என்று நான் கூறவில்லை. எவ்வாறான சவால்கள் வந்தாலும் விவசாயிகளுக்கான முன்னிலையாக நாங்கள் தயாராக இருக்கிறோம் - என்றார்.

## 20.06.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව / இலங்கை மத்திய வங்கி / CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 134 6055 | 145 8446 |
| கனேடியன் டொலர் | 160 82 1 | 173 0403 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41 2733 | 44 3053 |
| யூரோ | 261 8428 | 276 3242 |
| ஜப்பான் யென் | 1 5161 | 1 6224 |
| சிங்கப்பூர் டொலர் | 144 4081 | 154 7556 |
| ஸ்ரேலிங் பவுன் | 322 5 15 | 34 2361 |
| சுவிஸ் பிராங்க் | 254 1734 | 270 8 72 |
| ஐ.அ.டொலர் | 245 1786 | 255 727 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 845 7474 |
| குவைட் | குவைட் தினார் | 0,063 5 21 |
| ஓமான் | ஓமான் றியால் | 826 7 |
| கட்டார் | கட்டார் றியால் | 88 484 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 0325 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 1043 |

# பாடசாலை மாணவர்களுக்கான உயிர்காக்கும் தொழில்நுட்பங்கள் தொடர்பான செயலமர்வு





(கண்டி நிருபர்)

ஸ்ரீலங்கா உயிர்காக்கும் சங்கம் மற்றும் மத்திய மாகாண விளையாட்டுத் திணைக் களம் என்பவற்றின் அனுசரணையில் வீனஸ் நீரியல் விளையாட்டுகள் கழகத்தினால் (Water Venus Aqua Ticks Club) முதன்முறையாக ஏற்பாடு செய்யப் பட்ட பாடசாலை மாணவர்களுக்கான உயிர்காக்கும் தொழில்நுட்பங்கள் தொடர்பான செயல்முறை அமர்வொன்று நேற்று முன்தினம் (19) இடம்பெற்றது.

இது கண்டி, திகன விளையாட்டு கூட்டுத் தொகுதியில் இடம்பெற்றது. கண்டி பிரதேச உயிர்காப்புப் பிரிவின் உத்தியோகத்தர்கள் பலர் கலந்துகொண்ட இந்த ஒரு நாள் செயலமர்வில் மாகாணத்தைச் சேர்ந்த 30 பாடசாலை மாணவர்கள் பங்குகொண்டு நீர் பரப்புகளில் உயிர்காக்கும் தொழில்நுட்பங்கள் தொடர்பான நடைமுறை அறிவு வழங்கப்பட்டது.

கண்டி தேசிய வைத்தியசாலையின் விளையாட்டு மருத்துவப் பிரிவின் விளையாட்டு மருத்துவம் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் டொக்டர் அசேல ரத்நாயக்கவினால் பிரதான உரை ஒன்றும் நடத்தப்பட்டது.

செயலமர்வில் மாகாண விளையாட்டுத்திணைக் களத்தின் உதவிப் பணிப்பாளர் ஜகத் கீர்த்தி மற்றும் வீனஸ் நீரியல் விளையாட்டுகள் கழகத்தின் பயிற்சியாளர் உபாலி ஹேரத் ஆகியோரும் கலந்துகொண்டனர்.



அவசர மருந்து தேவைக்காக சிவபூமி அறக்கட்டளை ஊடாக அவுஸ்திரேலியா சிட்னியில் வசிக்கும் மகிந்தன் மகாதேவா வழங்கிய பன்னிரெண்டு இலட்சம் ரூபாவை நேற்று (20) மகப்பேற்று வைத்திய நிபுணர் ந.சரவணபவாவிடம் கலாநிதி ஆறு.திருமுருகன் கையளித்தார்.

# வெட்டுக்காயங்களுடன் கை - வாய் கட்டப்பட்ட நிலையில் ஒருவரின் சடலம் மீட்பு

மொரட்டுமுல்ல, மோல்பே பிரதேசத்தில் கைகள் கட்டப்பட்டு, வாய் பிளாஸ்டரினால் ஒட்டப்பட்ட நிலையில் வெட்டுக்காயங்களுடன் நபரொருவரின் சடலம் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

மோல்பே மாற்று வீதிக்கு அருகில் ஆணொருவர் விழுந்து கிடப்பதாக நேற்று முன்தினம் (19) பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய குறித்த நபரை பாணந்துறை வைத்தியசாலையில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், வைத்தியசாலையில் சேர்க்கும்போது அவர் உயிரிழந்துள்ளதாக மருத்துவர்கள் உறுதிப்படுத்தியிருந்ததாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இவ்வாறு உயிரிழந்த நபர் யார் என்பது உறுதிப்படுத்தப்படவில்லை என்பதுடன், 20 தொடக்கம் 25 வயதுக்கு இடைப்பட்ட நபரொருவராக இருக்கசலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். 5 அடி 6 அங்குலம் உயரமுடைய உயிரிழந்த நபர் நீள நிற சேர்ட்டும் வெள்ளை நிற காற்சட்டையும் அணிந்திருந்ததாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா சென்ற 23 பேர் அந்நாட்டு அதிகாரிகளினால் கைது

## அவர்கள் மீளவும் நாட்டுக்கு அனுப்பிவைப்பு

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்வதற்காக நீண்டநாள் மீன்பிடிப் படகொன்றில் பயணித்துக்கொண்டிருந்த 223 இலங்கையர்கள் அவுஸ்திரேலிய கரையோர பாதுகாப்பு அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டதன் பின்னர் கிறிஸ்மஸ் தீவுக்கு அழைத்துச் சென்று, அங்கிருந்து நேற்று (20) கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் கடந்த மே மாதம் 27ஆம் திகதி வென்னப்புவ, கொஸ்வாடிய பிரதேசத்திலிருந்து அவுஸ்திரேலியாவை நோக்கிச் சென்றுள்ளனர். இவர்கள் 23 பேரில் ஒருவர் பெண் என்பதுடன், நீர்கொழும்பு, கொஸ்வாடிய மற்றும் மூதூர் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இவர்கள் படகினூடாக அவுஸ்திரேலியாவின் கடற்பரப்பை நெருங்கியபோது அந்நாட்டு கரையோர பாதுகாப்பு அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து அங்கு தடுத்துவைக்கப்பட்டிருந்த இவர்கள் மூவரும் நேற்று முன்தினம் இரவு கிறிஸ்மஸ் தீவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு நேற்று இவ்வாறு மீண்டும் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

தற்போதைய நிலைமையில், சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு வருபவர்களை கைதுசெய்து, அவர்களை கிறிஸ்மஸ் தீவில் தடுத்துவைக்காதிருக்க அந்நாட்டு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இவ்வாறு இலங்கைக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படுபவர்கள் நேற்று காலை 03.50 மணிக்கு அவுஸ்திரேலியாவுக்கு சொந்தமான ஏ.எஸ்.வை. - 977 என்ற விமானத்தினூடாக கட்டுநாயக்க விமானநிலையத்துக்கு திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையின் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானியரக அதிகாரிகள் சிலர் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வருகை தந்துள்ளனர். அவர்கள் இந்த விமானத்திலிருந்த 50 பேரடங்கிய அவுஸ்திரேலிய பாதுகாப்பு அதிகாரிகளினூடாக இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள்.

அவர்கள் விமான நிலையத்திலுள்ள குடிவரவு-குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளினால் பொறுப்பேற்கப்பட்டதன் பின்னர், மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.



கொழும்பு , தெவட்டஹக செய்க் உஸ்மான் வலியுல்லாஹ்வின் 205ஆவது உரூஸ் முபாரக் மெலித் வைபவம் கடந்த 10 நாட்களாக இடம்பெற்று நேற்று முன்தினம் (19) மாலை விசேட துஆப் பிரார்த்தனையுடன் முடிவடைந்தது. பள்ளிவாசலின் தலைவர் றியாஸ் சாலி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டிருந்தனர். இதன்போது மெலீத் மற்றும் குர்ஆன் தமாம் நிகழ்வுகள் இடம்பெற்றன. (படங்கள் ஏ.எஸ்.எம்.ஜாவித்)



# யாழில் ஆசிரியர்கள் நேற்றும் எரிபொருள் கோரி போராட்டம்





(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணத்தில் க.பொ.த. சாதாரண தர விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபடும் ஆசிரியர்கள் நேற்று எரிபொருள் கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்கு முன்னால் நேற்றுக் காலை ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் உரிய எரிபொருள் வழங்கப்பட வேண்டும் அல்லது தமக்கான எரிபொருளை பெறுவதற்கு குறிப்பிட்ட எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றினை ஒதுக்குமாறும் கோரியே இப்போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது "ரோட்டில் நிற்பதா? போட்டில் நிற்பதா?, பெற்றோல் அடிப்பதா? விடைத்தாள் திருத்துவதா?" போன்ற கோஷங்களும் எழுப்பப்பட்டன.

அதேவேளை, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் எரிபொருள் வேண்டும் எனக்கோரி ஆசிரியர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் அறநெறி பாடசாலைக்கு உதவிப்பொருட்கள்

(சாவகச்சேரி நிருபர்)

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் நாடாளுமன்ற வரவு-செலவுத்திட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு மூலம் நேற்று முன்தினம் (19) மாவிட்டபுரம் தெற்கு கிராம அறநெறிப் பாடசாலைக்கு ஒரு தொகுதி விளையாட்டு மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

குறித்த உதவித்திட்டத்தை நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் அறநெறிப் பாடசாலை நிர்வாகத்தினரிடம் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்துசமய விழுமியங்களை அடுத்த சந்ததிக்கு கடத்தி தமிழையும் சமயத்தையும் வளர்த்தெடுக்கும் அளப்பரிய பணிகளை அறநெறிப் பாடசாலைகள் முன்னெடுத்து வருகின்றன.

அந்தப் பணிகளை அறநெறிப் பாடசாலைகள் தொடர்ந்தும் முன்னெடுத்து பிள்ளைகளை நாட்டின் சிறந்த பிரஜைகளாக உருவாக்குவதற்குத் தேவையான உதவிகளை வழங்க நான் தயாராக இருக்கிறேன் – என்றார்.




## ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடி தெற்கு பகுதியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் ஒருவர் நேற்று முன்தினம் (19) காலை தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டிற்கு அருகாமையிலுள்ள தனது காணி ஒன்றிலேயே இவ்வாறு தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் மருந்தகத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள 63 வயதான நபர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் மீட்கப்பட்டு மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## கீரிமலையில் ஆணொருவரின் சடலம் மீட்பு

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் கீரிமலையில் சந்தேகத்திற்கு இடமான முறையில் உயிரிழந்துள்ள நிலையில் முதியவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கீரிமலை புதிய கொலனி பகுதியைச் சேர்ந்த சங்கிலியன் நடராசா (வயது 63) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# யாழ். வல்லையில் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்ட இரு இளைஞர்கள் மடக்கிப்பிடிப்பு

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் வல்லைப் பகுதியில் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்ட இரண்டு இளைஞர்கள் பொதுமக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

வல்லை பகுதியில் நேற்று முன்தினம் (19) இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

புத்தூர் பகுதியில் இறைச்சி வியாபாரம் செய்யும் வியாபாரி, வல்லை பகுதியூடாக வீட்டுக்குச் சென்றுள்ளார். இதன் போது மோட்டார்சைக்கிளில் வந்த 2 இளைஞர்கள் கத்திமுனையில் வியாபாரியை அச்சுறுத்தி அவரிடமிருந்த 3 இலட்சம் ரூபா பணத்தினை கொள்ளை அடித்துள்ளனர்.

சாமர்த்தியமாக செயல்பட்ட இறைச்சி வியாபாரி ஒரு இளைஞனை துரத்திப் பிடித்தார். மற்றவர் அவ்விடத்திலிருந்து தப்பிச் சென்றிருந்தார்.

அதேவேளை, அப்பகுதியில் கூடிய இளைஞர்கள், தப்பிச்சென்ற இளைஞனை நாவல் காட்டுப்பகுதியிலுள்ள கோயில் கேணியில் கால் கழுவிக்கொண்டிருந்தபோது பிடித்தனர். வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்ட இளைஞர்கள் இருவரும் யாழ்ப்பாணம் புறநகர்ப் பகுதியை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டது.

இளைஞர்களின் உடைமையிலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணம் மீட்கப்பட்டதுடன், இருவரையும் அச்சுவேலி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

# டெஸ்போட் கீழ்ப்பிரிவு வீதியில் கொட்டப்படும் குப்பைக் கூளங்களால் மக்கள் அசௌகரியம்

## நுவரெலியா பிரதேச சபை கண்டுகொள்வதில்லையென பாதசாரிகள் குற்றச்சாட்டு



(செ.திவாகரன்)

நுவரெலியா பிரதேச சபையின் கீழ் இயங்கும் நானுஓயா டெஸ்போட் கீழ்ப்பிரிவில் வசிக்கும் பிரதேசவாசிகள் குப்பைக்கூளங்களை நானுஓயா டெஸ்போட் பாடசாலைக்கு செல்லும் பிரதான வீதியோரங்களில் கொட்டுவதனால் தாம் சுகாதார சீர்கேட்டுக்கு உள்ளாவதாக அவ்வீதியூடாக பயணிக்கும் பாதசாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர். மேலும், இவ்வீதி பொது மக்கள், பாடசாலை மாணவர்கள் பயன்படுத்தும் முதன்மை வீதியாகவும் காணப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் 90குடும்பங்கள் வரை வசிக்கின்றன. வீடுகளில் அழுகிய உணவுப் பொருட்கள், மாமிசங்கள், எலும்புத்துண்டுகள், பிளாஸ்டிக் போத்தல்கள், எளிதில் மக்கிப்போகாத பொலித்தீன் பைகளில் கட்டப்பட்ட சில கழிவுப்பொருட்களை கொட்டுவதால் குப்பைகளுடன் மழைநீர் சேரும்போது சாக்கடைகள் நிறைந்த குப்பை நீராக மாறுகின்றது. இவை நிலத்தடி நீரிலும் கலக்கின்றன. மண், நீர் என்று மொத்த சுற்றுச்சூழலே மாசடைகின்றது.

வீதியோரம் குப்பைகள் குவிக்கப்பட்டு கிடக்கின்றமையால் நாய்கள், பறவைகள் அவற்றை நாலாபுறமும் இழுத்துச் சென்று போடுவதால் நடைபாதை, பிரதான பாதை என்பன அலங்கோலமாகக் காட்சி தருகின்றன. இதனால் பாதசாரிகளும் வாகன சாரதிகளும் பிரதேசவாசிகளுமே வெகுவாக பாதிக்கப்படுகின்றனர்.

குப்பைகள் பல நாட்களாக அகற்றப்படாததால் அவை துர்நாற்றம் வீசுவது மாத்திரமன்றி, ஈக்களின் பெருக்கமும் நுளம்புகளின் பெருக்கமும் சமீப நாட்களாக அதிகரித்து வருகின்றது. இதனால் டெங்கு நோய்க்கு நிகரான, ஈக்களால் பரப்பப்படும் வாந்திபேதி, வயிற்றோட்டம் போன்ற வியாதிகளும் தொற்றத் தொடங்கிவிடும் ஆபத்து உள்ளது.

இப்பகுதியில் குப்பை கொட்டுவதற்கான உரிய இடம் ஒதுக்கப்படாமையும் நுவரெலியா பிரதேச சபைக்குட்பட்ட குப்பைகளை சேகரிப்பதற்காக வாகனம் மற்றும் ஊழியர்கள் இப்பகுதிக்கு வராமையே இதற்கான காரணமாகும். பல தடவைகள் அதிகாரிகளிடம் கூறியும் இதுவரை எவரும் கவனத்திற்கொள்ளவில்லை என இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது நாட்டில் டெங்கு நோய் பரவிவருவதால் மக்கள் அவதானமாக இருக்குமாறு சுகாதாரத் தரப்பினரால் அறிவுறுத்தப்பட்டுள்ள நிலையில், இவ்வாறு குப்பைகள் வீதிகளில் பரவி கிடப்பதை பொறுப்பான சுகாதார அதிகாரிகள் கவனத்திற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.





வத்துகாமம் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் தேவஸ்தான வைகாசி விசாக இரதோற்சவம் அண்மையில் நடைபெற்றது. இதன்போது காளாஞ்சி வழங்கப்படுவதையும் உற்சவமூர்த்தி வெளிவீதி உலா வருவதையும் காணலாம். மேலும், இரதோற்சவம் ஸ்ரீஐயப்பதாஸ சாம்பசிவா சிவாச்சாரியார் தலைமையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்: எஸ்.ராமதாஸ் மகேஸ்வரி)

## பசறை தமிழ் மகா வித்தியாலய ஸ்ரீசரஸ்வதி ஆலய மகா கும்பாபிஷேக நிகழ்வுகள்

(நடராஜா மலர்வேந்தன்)

பசறை தமிழ் மகா வித்தியாலய அருள்மிகு ஸ்ரீசரஸ்வதி ஆலய புனருத்தாரன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா இன்று 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் நவக்கிரக ஹோமம் நடைபெறும்.

நாளை புதன்கிழமை காலை 7.30 மணி முதல் எண்ணெய்காப்பு சாத்துதல் நடைபெறும். நாளைமறுதினம் வியாழக்கிழமை 7.00 மணிக்கு யாக பூஜை மற்றும் மகா கும்பாபிஷேகத்துடன் மகேஸ்வர பூஜை நடைபெற்று அன்னதானம் வழங்கப்படும்.

தொடர்ந்து 06 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறுவதோடு எதிர்வரும் 30ஆம் திகதி அஷ்டோத்திர சத சங்காபிஷேகம் நடைபெறும். கும்பாபிஷேக கிரியைகள் ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி ஆலய பிரதம குரு சிவஸ்ரீ இரா.சிவகுமார் சிவாச்சாரியார் தலைமையில் நடைபெறவுள்ளது.

# மலையகத்துக்கென தனியான நிவாரணத் திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும்

## கண்டி மாவட்ட எம்.பி. வேலுகுமார்



இந்தியாவினால் வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் மலையக தோட்ட மக்களுக்கு ஒழுங்கான முறையில் கிடைக்கப்பெறவில்லை. பொதுவாகவே நிவாரணங்கள், உதவித் திட்டங்கள் மேற்கொள்ளும்போது மலையக மக்களுக்கு பாரபட்சம் காட்டப்படுவது வழமை. அதுவே இந்திய நிவாரணப் பொருட்களிலும் நடைபெற்றிருக்கின்றது என தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்துள்ளார்.

மேலும், இன்றைய அரசாங்கத்திற்கு எமது மக்களின் வாக்குகளை பெற்றுக்கொடுத்தவர்கள் அரசில் இருந்து வெளியேறிவிட்டோம் எனக்கூறி தம்மை காப்பாற்றிக்கொள்ள முடியாது. இன்றைய அனைத்து நிலைமைகளுக்கும் இவர்களே பொறுப்புக்கூற வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் கடுமையான பொருளாதார நெருக்கடி தொடர்ந்து வரும் நாட்களில் நிலைமை மிக மோசமானதாக காணப்படப்போகின்றது. அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடி மலையக மக்களுக்கென தனியான நிவாரணத் திட்டமொன்றை முன்னெடுத்தல் வேண்டும். அவ்வாறில்லாதவிடத்து, பாரபட்சத்திற்கு மத்தியில் மிக மோசமான பாதிப்பை மலையக தோட்ட மக்கள் எதிர்கொள்ள வேண்டி ஏற்படும்.

வழமையான நாட்களில் முறையான விநியோக வழிமுறையில்லாத தோட்டப் பகுதிகள் பெருமளவு பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றது. இச்சூழ்நிலையில் உடனடியாக தோட்ட மக்களுக்கு விசேட பொருள் விநியோக வழிமுறையும் நிவாரணத் திட்டமும் முன்வைக்கப்பட வேண்டும்.

தோட்டங்களின் வேலை நாட்களும் குறைவடைந்துள்ளது. போக்குவரத்து நெருக்கடியினால் வெளி இடங்களில் சென்று வேலைகளை செய்வதற்கும் முடியாதுள்ளது.

மறுபுறம், பொருட்களின் விலை பல மடங்கு அதிகரித்துள்ளது. பொருள் தட்டுப்பாடு மிக மோசமான நிலையில் உள்ளது. இவ்வாறான சூழலில் தோட்ட மக்களை பாதுகாக்க விசேடமான நிவாரணத் திட்டமொன்று உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டும்.





இறக்குவானை புனித அந்தோனியார் தேவாலயத்தின் 125ஆவது வருடாந்த திருவிழா இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் அதிமேதகு பிரீட்டஸ் சந்திர பெரேரா தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது புனித அந்தோனியார் தேவாலய அருட்தந்தை என்லிஸ் சுரங்கவினால் 125ஆவது வருடாந்த திருவிழாவுக்கான பதாகை திறந்துவைக்கப்பட்டதையும் கலந்துகொண்டோரையும் காணலாம். (படங்கள்: எஸ்.ராமதாஸ்)

# மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை ஊழியர்கள் எரிபொருள் வழங்கக்கோரி ஆர்ப்பாட்டப் பேரணி







(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றுவோர் நேற்று (20) எரிபொருள் வழங்குமாறுகோரி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலிருந்து ஆர்ப்பாட்டப் பேரணியாக வந்து மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதியர்கள், சுகாதாரத்துறை ஊழியர்கள் என பல்வேறு தரப்பினரும் இந்த போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

நேற்று மதிய உணவு நேரத்தில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை முன்பாக ஒன்றுகூடியவர்கள் அங்கிருந்து கோவிந்தன் வீதியூடாக மட்டக்களப்பு நகரினை அடைந்து மட்டக்களப்பு நகர் ஊடாக மட்டக்களப்பு மாவட்ட செயலகம் வரையில் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது. அதனை தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினை முற்றிகையிட்டு போராட்டம் முன்னெடுக்கப்பட்ட நிலையில் மாவட்ட செயலகத்தில் ஐந்து சுகாதாரத்துறை சார்ந்தவர்கள் அழைக்கப்பட்டு பேச்சுவார்த்தை மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரினால் நடத்தப்பட்டது.

இதன்போது, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றுவோருக்கு எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு தினத்தை ஒரு நிலையத்தில் ஏற்பாடு செய்து தருவதாக வழங்கப்பட்ட உறுதிமொழியை யடுத்து, போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப் பட்டது. எனினும், தாங்கள் தொடர்ச்சியாக கோரிக்கையினை முன்வைத்துவந்தபோதிலும் மாவட்ட நிர்வாகம் அதனை கவனத்தில்கொள்ளா மல் செயற்பட்டு வந்ததாக இதன்போது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

அத்தியாவசிய தேவையாக கருதப்படும் சுகாதார சேவையில் ஈடுபட்டு வருவோர் வந்து செல்வதற்கான எரிபொருள் மிக அத்தியாவசிய மானது எனவும் அவ்வாறு எரிபொருள் வழங்காவிட்டால் வைத்தியசாலையில் நோயாளர் களை பராமரிப்பதில் பாரிய சிக்கல் நிலைகள் ஏற்படும் எனவும் இதன்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சார்பில் கருத்து தெரிவித்த டாக்டர் மதனழகன் தெரிவித்தார்.

# உணவு மற்றும் மருந்துப் பொருட்களுக்காக அவுஸ்திரேலியா 50 மில்லியன் டொலர் உதவி

இலங்கைக்கு 50 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்கள் நிதி உதவி வழங்கவுள்ளதாக அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

அவசரகால உணவு மற்றும் மருந்துப் பாவனைக்கான குறித்த நிதித்தொகை வழங்கப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. உணவு, மருந்து மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இலங்கை தற்போது கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

குறித்த நிதி உதவியில், 22 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்கள் உலக உணவுத் திட்டத்திற்காகவும் மூன்று மில்லியன் அவுஸ்தி ரேலிய டொலர்கள் மக்களின் அன்றாட உணவுத் தேவைகளைப் பூர்த்திசெய்ய செலவிடப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

2022/23 க்குள் இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஆதரவாக மேலும் 23 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்கள் வழங்கப் படும் என தெரிவிக்கப்படுகின்றது.









"வீட்டையும் ஊரையும் நாட்டையும் பாதிக்கும் போதைப் பாவனை யிலிருந்து பாதுகாப்போம்" எனும் தொனிப்பொருளில் ஹப்புகஸ்தலாவை மத்திய நிர்வாக சபையின் ஏற்பாட்டில் அனைத்துத் தரப்பினரையும் உள்வாங்கும் வகையில் விசேட கலந்துரையாடல் ஒன்று அண்மையில் இடம்பெற்றது. (ஹப்புகஸ்தலாவை செய்தியாளர்)

# நியூயோர்க்கில் நடத்தப்பட்ட 'இலங்கையின் முகங்கள்' நிகழ்வு














துருக்கி எயார்லைன்ஸ் மற்றும் ஜெட்விங் டிரவல்ஸ் நிறுவனத்துடன் இணைந்து 'இலங்கையின் முகங்கள்' சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்வை நியூயோர்க்கில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்னெடுத்துள்ளது.

இலங்கை தனது பார்வையாளர்களுக்கு வழங்கும் பல கவர்ச்சிகளை வெளிப்படுத்தும் நிகழ்வாக 'இலங்கை யின் முகங்கள்' நிகழ்வு 2022 ஜூன் 14ஆம் திகதி நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளுக்கான இலங்கைத் தூதரக வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

கூட்டத்தை வரவேற்ற நியூயோர்க்கில் உள்ள இலங்கைத் தூதுவர் மொஹான் பீரிஸ், எட்டு யுனெஸ்கோ உலக பாரம்பரிய தளங்கள், அழகிய கடற்கரைகள், மலைகளின் குளிர் காலநிலை, கலாசார பாரம்பரியம் மற்றும் அதன் விலங்கினங்கள் மற்றும் தாவரங்களின் பன்முகத்தன்மை உட்பட மார்கோ போலோவின் காலத்திலிருந்து பயணி களுக்கு இலங்கையில் காணப்படும் பல்வேறு காட்சிகள் மற்றும் ஒலிகள் குறித்து பேசினார்.

துருக்கிய எயார்லைன்ஸின் பொது முகாமையாளர் எம்ரே இஸ்மாயிலோக்லு மற்றும் துருக்கிய எயார்லைன்ஸின் பிராந்திய முகாமையாளர் அல்ப் ஒஸாமான் ஆகியோர் இலங்கையுடனான அதன் கூட்டாண்மை மற்றும் துருக்கிய எயார்லைன்ஸ் உலகளா விய வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் வசதிகள் குறித்து விரிவான விளக்கமளித்தனர்.

துருக்கிய எயார் லைன்ஸ் தற்போது நியூயோர்க்கிலிருந்து இஸ்தான்புல் மற்றும் மாலே வழியாக கொழும்புக்கு வாரத்திற்கு ஏழு விமானங்களைக் கொண்டுள்ளதுடன், ஒக்டோபர் தொடக்கத்தில் இஸ்தான்புல்லில் இருந்து கொழும்புக்கு வாரத்திற்கு பதினான்கு விமானங்கள் என இரட்டிப்பாகும் எனத் தெரிவித்தனர்.

ஜெட்விங் ஹோலிடேஸ், ஜெட்விங் ஏர், ஜெட்விங் ஈவென்ட்ஸ், ஜெட்விங் அட்வென்ச்சர் மற்றும் ஜெட் லெஷர் மோல்டீவ்ஸ் போன்ற 9க்கும் மேற்பட்ட ஜெட்விங் துணை நிறுவனங்களை உள்ளடக்கிய இலங்கையில் உள்ள ஜெட்விங் ஹோட்டல்களில் கிடைக்கும் சலுகைகள் மற்றும் வசதிகள் குறித்து ஜெட்விங் டிரவல்ஸ் தலைவர் ஷிரோமல் குரே மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர் ராஜு அரசரத்னம் ஆகியோர் விளக்கமளித்தனர்.

பசிலூர் தேயிலையைச் சேர்ந்த ரசிக விக்கிரமசிங்க வினால் டீ டேஸ்டிங் செயல்விளக்கம் நடத்தப்பட்டதுடன், அதில் விருந்தினர்களுக்கு இலங்கையில் கிடைக்கும் பல்வேறு வகையான தேயிலை வகைகள் உட்பட பல்வேறு பிரதேசங்களில் இருந்து வந்த பல்வேறு வகையான தேயிலைகள் வழங்கி விருந்தளிக்கப்பட்டன.

கொழும்பில் உள்ள நட்சத்திர வகுப்பு ஜெட்விங் ஹோட்டல்களிலும் மாலேயில் உள்ள ஹெரிடன்ஸ் ஆராவிலும் 5 இரவுகள் தங்குவதற்கும் சலுகைகளை வழங்கும் வகையில், இலங்கைக்கு இரண்டு வணிக வகுப்பு டிக்கெட்டுகளை வழங்கிய ரேஃபிள் டிராவும் நடைபெற்றதுடன் இந்நிகழ்வில் முப்படைகளின் முன்னணி சுற்றுலாப் பயணிகள், நியூயோர்க்கைத் தளமாகக் கொண்ட தூதுவர்கள் மற்றும் இராஜதந்திரப் படைகள் மற்றும் அமெரிக்கா-இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

விருந்தினர்களுக்கு இலங்கை உணவு வகைகள் மற்றும் பசிலூர் தேநீர் வழங்கப்பட்டது.

# பாம்பு தீண்டி சிறுவன் மரணம்

(கெலும் குணதிலக்க)



பாம்பு தீண்டியதன் காரண மாக மொனராகலை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்ட மூன்றரை வயது சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ள சம்பவம் நேற்றுமுன்தினம் (19) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் மொனராகலை, கொலன்ன வின்ன மஹகங் கொடை பகுதியில் இடம் பெற்றுள்ளது. அங்கு வசித்த டபிள்யூ.எம். அகேன் யேனுக வனசிங்க என்ற சிறுவனே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அயலவர் ஒருவரின் வீட்டுக்குச் சென்று முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்த வேளை சிறுவனை பாம்பு தீண்டியுள்ளது. இதனையடுத்து பொதுமக்களின் உதவியுடன் வைத்தியசாலையில் சிறுவன் அனுமதிக்கப்பட்டுள்ளான். எனினும், அவ்வேளையில் சிறுவன் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திகதி 19.06.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4791
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.26,924,416.40
ஆங்கில எழுத்து H வெற்றி இலக்கங்கள் 5 3 9 9 2 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1269
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,247,700.00
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள் 3 2 0 3 4 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.11,903,390.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3033
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.- 3,209,360.00
ஆங்கில எழுத்து A வெற்றி இலக்கங்கள் 12 49 56 77
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.61,588,571.60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 821
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,732,840.00
Y 06 11 39 67 வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 115,225,868.40

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0100
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.3,495,140.00
இலக்கினம் சிம்மம் வெற்றி இலக்கங்கள் 01 09 15 57
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,597,450.40

கோடி 25+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1139
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.- 2,341,660.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.257,542,242.00
P 14 21 52 58 62
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
தொ.நகல்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# ஜாமிஅதுல் பாஸிய்யா கலாபீட தலைப்பாகை சூட்டும் நிகழ்வு













(பீ.எம். முக்தார்)

சீனன்கோட்டை ஜாமிஅதுல் பாஸிய்யா கலாபீட 4ஆம், 5ஆம் தலைப்பாகை சூடும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை பாஸியா பெரிய பள்ளிவாசலில் 131ஆவது வருட மனாகிபுஷ் ஷாதுலி தமாம் மஜ்லிஸில் இடம்பெற்றது.

கலாபீட பணிப்பாளர் முகத்தமுஷ் ஷாதுலி மவ்லவி அல்ஹாஜ் பஸ்லான் அஷ்ரபியின் நெறிப்படுத்தலில் பள்ளி சங்க தலைவர் முக்தார் ஹாஜியார், இணைச் செயலாளர் சிஹாப் ஹாஜியார், கலாபீட தலைவர் சட்டத்தரணி ஹம்ஸா ஹாஜியார், கலாபீட ஸ்தாபக பொருளாளர் அதாவுல்லாஹ் ஹாஜியார் ஆகியோர் முன்னிலையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

கலீபதுஷ் ஷாதுலி அஸ்ஸெய்யித் அல்ஹாஜ் அலவி மவ்லானா (முர்ஸி), மாத்தறை மின்னதுல் பாஸிய்யா அரபுக் கல்லூரி அதிபர் உஸ்தாத் கலீபதுஷ் ஷாதுலி இஸ்திகார் (பாரி), கலீபதுஷ் ஷாதுலி ரபீக் (பஹ்ஜி), கலீபதுஷ் ஷாதுலி பைரூஸ் (பஹ்ஜி), காலி பஹ்ஜதுல் இப்ராஹிமிய்யா அரபுக் கல்லூரி அதிபர் உஸ்தாத் மவ்லவி ரஸூக் (பஹ்ஜி), வெலிகம கப்புவத்த ரிபாயியா அரபுக் கல்லூரி அதிபர் உஸ்தாத் மவ்லவி அல்ஹாஜ் அப்துல்லாஹ் (ரவ்ழி), காலி மக்கிய்யா அரபுக் கல்லூரி உப அதிபர் உஸ்தாத் ரயீஹுத்தீன் (மக்கி), வெலிகம முர்ஸிய்யா அரபுக் கல்லூரி உப அதிபர் உஸ்தாத் மவ்லவி முகத்தமுஷ் ஷாதுலி அஸ்கீன் (முர்ஸி), கலாபீட அதிபர் உஸ்தாத் ராஸிக் (முப்யிதி) ஆகியோர் மாணவர்களுக்கு தலைப்பாகை அணிவித்தார்கள்.

பேருவளை நகரபிதா மஸாஹிம் முஹம்மத், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் எம்.எம்.எம். அம்ஜாத் உட்பட பள்ளிச்சங்க உறுப்பினர்கள், சீனன்கோட்டை ஜாமிஅதுல் பாஸிய்யா கலாபீட உறுப்பினர்கள், உலமாக்கள், இஹ்வான்கள் நிகழ்வில் பங்குபற்றினர்.

# கல்வியமைச்சின் அதிகாரிகளால் பாடசாலை நடத்துவது தொடர்பில் குழப்பமான தீர்மானங்கள்

**நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப்**

(திருகோணமலை நிருபர்)

நாட்டின் தற்போதைய நிலையை கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவும், கல்வி அமைச்சு அதிகாரிகளும் இன்னும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. இதனால்தான் இவ்வாரம் பாடசாலை நடத்துவது தொடர்பில் குழப்பமான தீர்மானங்கள் எடுக்கப் பட்டுள்ளன - என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் எரிபொருள் பிரச்சினை உக்கிரமடைந்துள்ளது. எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் நீண்ட வரிசைகளில் நாட்கணக்கில் காத்து நிற்கின்றனர். இதில் அதிபர், ஆசிரியர்களும் விதிவிலக்கல்ல. அவர்களும் நீண்ட வரிசைகளிலேயே நிற்கவேண்டியுள்ளது.

இந்நிலையில் இவ்வாரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் எரிபொருளை விநியோகிக்க முடியாது. எனவே, மக்கள் வரிசைகளில் நிற்க வேண்டாம் என்றும் எரிசக்தி அமைச்சர் அறிவித்துள்ளார். இதனை மையமாகவே வைத்தே கொழும்பு மாவட்ட பாடசாலைகளையும், நகர்ப்புறப் பாடசாலைகளையும் ஒரு வாரம் மூடுவதென தீர்மானம் எடுக்கப்பட்டது. எனினும், ஏனைய பாடசாலைகள் தொடர்பில் தீர்க்கமான முடிவு எடுக்கப்படவில்லை.

அதிபர், ஆசிரியர்களின் நிலையைப் புரிந்துகொள்ளாமல் எடுக்கப்பட்ட தீர்மானம் இதுவென்பது தெளிவாகத் தெரிகின்றது. பல ஆசிரியர்கள் அவர்களது வசிப்பிடத்திலிருந்து பல



கிலோமீற்றர்களுக்கு அப்பாலுள்ள பாடசாலைகளில் பணி புரிகின்றனர். இவர்களுள் அதிகமானோர் மோட்டார்சைக்கிள்களையே தமது பயணத்திற்கு பயன்படுத்துகின்றனர். எரிபொருள் இன்மையால் இவர்களால் பாடசாலைகளுக்கு செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், பல கிராமப் புற பாடசாலைகளை நடத்த முடியாதென்பது தெளிவானது. அப்பாடசாலைகளுக்கு ஒன்லைன் மூலம் பாடங்களை நடத்துவதற்கான வசதிகளும் இல்லை.

எனவே, இந்த அரசாங்கம் எடுத்துள்ள இந்தத் தீர்மானங்களால் என்ன பிரயோசனம் ஏற்படப் போகின்றது என்பதை சிந்திக்கவேண்டியுள்ளது. நாட்டு நிலையைப் புரிந்துகொள்ள முடியாத கல்வி அமைச்சரும், அதிகாரிகளும் இருப்பது கவலையைத் தருகின்றது. ஒரே நாடு ஒரே சட்டம் என்பதுதான் கோட்டாபய அரசாங்கத்தின் தாரக மந்திரம். இந்நிலையில், நாட்டில் சில பாடசாலைகளை மூடவும், சில பாடசாலைகளை நடத்தவும் எந்த வகையில் தீர்மானம் எடுக்கமுடியும். இதுவா ஒரே நாடு ஒரே சட்டம் எனக் கேட்க விரும்புகின்றேன்.

இதனைத் தவிர, கிழக்கு மாகாணத்தின் சகல பாடசாலைகளும் வழமைபோன்று நடைபெறும் என்ற அறிவித்தலை கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சும், கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களமும் எடுத்துள்ளன என்ற செய்தியும் ஊடகங்களில் காணப்படுகின்றன. கிழக்கு மாகாணத்தின் அதிபர், ஆசிரியர்களுக்கு எரிபொருள் பிரச்சினை இல்லை என்ற அடிப்படையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அரச வாகனங்களில் பயணம் செய்வோருக்கு எரிபொருள் பிரச்சினை இல்லை. இதனால் அவர்களால் அதிபர், ஆசிரியர்களின் கஷ்ட நிலையை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது.

நகர்ப்புற பாடசாலைகளை மூட வேண்டும் என்ற கல்வி அமைச்சின் அறிவிப்பை இந்த மாகாணம் ஏற்றுக்கொள்ளாது புறந்தள்ளியுள்ளது என்பதையே இது காட்டுகின்றது. ஆளுக்கொரு தீர்மானமும், இடத்துக்கொரு தீர்மானமும் எடுத்து கல்வியில் குழப்பத்தை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது.

எனவே, நாட்டின் யதார்த்த நிலையை கல்வி அமைச்சரும், அதிகாரிகளும் புரிந்துகொள்ள வேண்டும். எரிபொருள் பிரச்சினையைக் காரணங்காட்டி கடந்த வெள்ளிக்கிழமை நாட்டிலுள்ள சகல பாடசாலைகளையும் மூட நடவடிக்கை எடுத்ததுபோல் இந்த வாரமும் சகல பாடசாலைகளையும் மூடும் தீர்மானத்தை அரசு எடுக்க வேண்டும் - என்றார்.

# விவசாயப் போருக்கு ஆதரவாக கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் அமைத்த வீட்டுத்தோட்டம்





(கிண்ணியா நிருபர்)

திருகோணமலையிலுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செயலக தோட்டத்தில், மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு அரச நிறுவனமும் முன்மாதிரி தோட்டம் அமைக்க எடுத்த தீர்மானத்தை உணர்த்தும் வகையில், கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் புதிய மரக்கன்றுகளை அண்மையில் நட்டு வைத்தார்.

மாகாண விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் பெறப்பட்ட இந்த மரக்கறி நாற்றுகள் மற்றும் விதைகள் ஆளுநர் மற்றும் அலுவலக அதிகாரிகளினால் தோட்டத்தில் நடப்பட்டது. இதேவேளை, கிழக்கு மாகாண சபையிலுள்ள அனைத்து அரச நிறுவனங்களின் தலைவர்களும் முன்மாதிரியான வீட்டுத் தோட்டத்தை அமைக்குமாறு ஆளுநர் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்நோக்கவிருக்கும் உணவுப் பற்றாக்குறையை எவ்வாறு வெற்றிகரமாகச் சமாளிப்பது என்பது குறித்து பொதுமக்களுக்குக் கற்பிப்பதற்கான முக்கிய அங்கமாக அரச நிறுவனங்களால் மாதிரி வீட்டுத்தோட்டத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது இத்திட்டத்தின் விசேட அம்சமாகும்.

# சாய்ந்தமருதில் எரிபொருள் வரிசையால் வாகனப் போக்குவரத்து ஸ்தம்பிதம்



(மாளிகைக்காடு நிருபர்)

அம்பாறை மாவட்ட சாய்ந்தமருது எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று (20) காலை முதல் பல்வேறு குழப்பநிலைக்கு மத்தியில் எரிபொருள் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் நீண்டவரிசையில் வாகனங்கள் காத்திருப்பதனால் போக்குவரத்து நெரிசல் அந்த இடத்தில் ஏற்பட்டுள்ளது.

சாய்ந்தமருதில் ஆரம்பிக்கும் ஸாஹிரா கல்லூரி சந்திமுதல் முடிவடையும் மாளிகா சந்திவரை மோட்டார்சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டிகள், கார்கள் போன்ற வாகனங்களில் வரிசையில் நேற்று (20) அதிகாலை முதல் எரிபொருளை பெற நீண்ட வரிசையில் பொதுமக்கள், சுகாதாரத்துறை உத்தியோகத்தர்கள், முன்கள பணியாளர்கள் என பலரும் வாகனங்களுடன் காத்திருந்தனர்.

இதனால் அவசர சிகிச்சைக்காக செல்லும் அம்புலன்ஸ் வண்டிகள் உட்பட அவசர முன்களப்பணி செய்யும் அரச திணைக்கள வாகனங்கள், பொதுமக்கள் எனப்பலரும் போக்குவரத்து நெரிசலில் சிக்கியிருந்ததுடன்



வாகன நெரிசலை கட்டுப்படுத்தி போக்குவரத்தை சீரமைக்கும் பணியை பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

# பரீட்சை மதிப்பீட்டுப் பணியிலுள்ள ஆசிரியர்களின் போராட்டத்துக்கு வெற்றி

## எரிபொருளை பெற்றுக்கொள்ள விசேட ஏற்பாடு!

(கல்லடி நிருபர்).

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் (19) பரீட்சை மதிப்பீட்டாளர்கள் ஒன்றிணைந்து தமது பரீட்சை மதிப்பீட்டுப் பணிக்கு செல்வதற்குரிய எரிபொருளை பெற பொறிமுறை ஒன்றினை ஏற்படுத்தித் தருமாறு மட்டக்களப்பு சென். மைக்கல் கல்லூரி முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை தொடங்கி மாவட்ட பொலிஸ் தலைமையகம் வரை நடத்தியிருந்தனர்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் இலங்கை ஆசிரியர் சங்க தொழிற்சங்கப் பிரதிநிதிகள், பரீட்சை மதிப்பீட்டு இனணப்பாளர்களுக்கிடையில் பேச்சுவார்த்தை ஒன்றும் நடைபெற்றிருந்தது.

இப்பேச்சுவார்த்தையின் பயனாக நேற்று (20) மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பரீட்சை நிலையங்களில் பரீட்சை மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் பி.ப. 3.00 மணி தொடக்கம் மட்டக்களப்பு சன்சைன் உணவகத்திற்கு அருகாமையில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தமது போக்குவரத்துக்குரிய எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியும் என மாவட்ட அரசாங்க அதிபர் பரீட்சை மதிப்பீட்டு இணைப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

மேலும், இதன்போது பரீட்சை மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடுபவர்களுக்கு பரீட்சை ஆனணயாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கான சிபாரிசுக் கடிதத்தினை கொண்டுவருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.

# மட்டக்களப்பில் மாபெரும் இரத்ததான நிகழ்வு



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு ஹெல்ப் ஹெவர் அமைப்பின் ஏற்பாட்டில் மாபெரும் இரத்ததான நிகழ்வு மட்டக்களப்பு ஆரையம்பதியில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கிவரும் ஹெல்ப் ஹெவர் அமைப்பானது "வறுமையை ஒழித்து வளர்ச்சியை காண்போம்" எனும் கருப்பொருளில் மாவட்டத்தில் சமூக பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. இதன் ஒரு செயல்பாடாக ஹெல்ப் ஹெவர் அமைப்புடன் மட்டக்களப்பு எச்.என்ட்.டி. தாதிய பாடசாலை இணைந்த ஏற்பாட்டில் மாபெரும் இரத்ததான முகாமொன்று முன்னெடுக்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நிலவுகின்ற இரத்த பற்றாக்குறையினை நிவர்த்திசெய்யும் வகையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க ஹெல்ப் ஹெவர் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான நிகழ்வில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்த வங்கி பிரிவு வைத்தியர் ஹரிஷாந், வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்கள், ஹெல்ப் ஹெவர் அமைப்பின் உறுப்பினர்கள், எச்.என்.டி. தாதிய பாடசாலை மாணவர்கள், இளைஞர், யுவதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு இரத்த கொடையினை வழங்கினர்.

# அட்டாளைச்சேனை கடற்கரையை சுத்தப்படுத்தும் நிகழ்வும் மர நடுகையும்



(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

உலக சுற்றாடல் வாரத்தினை முன்னிட்டு அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையினால் ஏற்பாடு செய்யப்பட்ட "மரம் நடுவோம் சூழலைப் பாதுகாப்போம்" எனும் தொனிப்பொருளில் மர நடுகையும் மற்றும் கடற்கரையைச் சுத்தப்படுத்தும் நிகழ்வும் அட்டாளைச்சேனை கடற்கரையில் கடந்த சனிக்கிழமை (18) நடைபெற்றது.

பொதுச் சுகாதாரப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.அகிலன் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில், வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி அஸாத் எம். ஹனிபா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பசுமை சூழலை உருவாக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் பயன்தரும் மரக்கன்றினை அட்டாளைச்சேனை ஜும்ஆப் பள்ளிவாசல் வளாகத்தில் நட்டுவைத்தார்.

கரையோரப் பிரதேசங்களைச் சுத்தப்படுத்தல், பசுமையாக்கல் நோக்கில் மரக்கன்றுகள் நட்டுவித்தல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் சுற்றாடல் வாரத்தினை முன்னிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கடற்கரையை சுத்தப்படுத்தும் சிரமதானப் பணியில் சேகரிக்கப்பட்ட வெற்றுப் போத்தல்கள், கண்ணாடிப் போத்தல்கள், அலுமினியம் தகடு, இறப்பர் மூடி, பொலித்தீன்கள் உள்ளிட்ட பொருட்கள் வேறுவேறாக தரம் பிரிக்கப்பட்டு திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்பாட்டிற்காக மீள்சுழற்சிக்காக அனுப்பி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம்.இஸ்மாயில், அட்டாளைச்சேனை பிரதேச சபை செயலாளர் எம்.ஐ.எம்.பாயிஸ், அட்டாளைச்சேனை அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் சட்டத்தரணி எம்.எஸ்.ஜுனைதீன், ஓய்வுபெற்ற உதவிக் கல்விப்பணிப்பாளர் யூ.எம்.வாஹிட், தாதிய பரிபாலகர் பி.ரீ.நௌபர், பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், வைத்தியசாலை பணியாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் 32ஆவது தியாகிகள் தினம் அக்கரைப்பற்றில்






(ஆலையடிவேம்பு நிருபர்)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் 32ஆவது தியாகிகள் தினம் நினைவேந்தல் நிகழ்வு அக்கரைப்பற்று பாவேந்தர் சனசமூக நிலைய மண்டபத்தில் நேற்று முன்தினம் (19) மாலை நடைபெற்றது.

முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் அக்கரைப்பற்று மண்ணின் மைந்தனும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முக்கியஸ்தருமான கே.சின்னையா தலைமையில் இடம்பெற்ற தியாகிகள் தின நினைவேந்தல் நிகழ்வில் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான வி.ஜெயகோபன், ஏ.எம்.சலீம், முத்துலிங்கம் வரதராஜன், ஸ்ரீ மருதடி மாணிக்கப்பிள்ளையார் ஆலயத் தலைவர் வி.புண்ணியமூர்த்தி ஆலய திருப்பணிச் சபை உறுப்பினர்கள் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நினைவேந்தல் நிகழ்வில் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது. தொடர்ந்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் தோழர் பத்மநாபாவின் உருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் கட்சியின் முக்கியஸ்தர்கள் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டு மலரஞ்சலி செலுத்தினர். பின்னர் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் உள்ளிட்ட உயிர் நீத்த அனைத்து உறவுகள் சார்பாக ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முக்கியஸ்தருமான கே.சின்னையா, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தமிழ் மக்களின் விடிவிற்காக முன்னெடுத்த அர்ப்பணிப்பான நடவடிக்கை மற்றும் அவர்களை நினைவுகூரவேண்டியதன் அவசியம் பற்றி குறிப்பிட்டார்.

மேலும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஆரம்பகால செயற்பாடுகள், எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் கருத்துரைத்தார்.

# ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு ஹஜ் கவியரங்கமும் கலாசார விளையாட்டு நிகழ்ச்சிகளும் நடத்த ஏற்பாடு

(கந்தளாய் நிருபர்)

கந்தளாய் கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு ஹஜ் கவியரங்கமும், கலை கலாசார விளையாட்டு நிகழ்சிகளும் எதிர்வரும் ஜூலை மாதம் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 2.30 மணியளவில் கந்தளாய் அல்-தாரீக் தேசிய பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் பேரவையின் தலைவர் முஸ்தபா சகாப்தீன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முட்டி உடைத்தல், பலூன் உடைத்தல், யானைக்கு கண் வைத்தல், கம்பியை சுற்றி ஓடுதல், பெரியோர்களுக்கான கண்கவர் நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

மாலை நிகழ்ச்சிகளாக நாடகம், வில்லுப்பாட்டு, ஹசீதா, சீனடி, பாடல், மிமிக்கிரி, தகரா கவியரங்கம் போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுக்கு அதிதிகளாக கந்தளாய் பிரதேச செயலாளர் உபேக்சா குமாரி, கலாசார உத்தியோகத்தர் நிமால் ஸ்ரீ பண்டார மற்றும் சமூகத் தலைவர்கள், கலைஞர்கள் என பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.





கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட அறநெறிப் பாடசாலைகளுக்கிடையே இடம்பெற்ற வில்லுப்பாட்டுப் போட்டியில் முதலிடம் பெற்ற பாண்டிருப்பு நாவலர் அறநெறிப் பாடசாலை மாணவர்களையும் பயிற்றுவித்த ஆசிரியை செல்வி யோகராணியையும் படத்தில் காணலாம்.

(படங்கள் - நற்பிட்டிமுனை நிருபர்)

# பாவனையாளர் அதிகாரசபையினரால் திடீர் சுற்றிவளைப்பு; பழைய விலையில் பதுக்கிவைக்கப்பட்ட பால்மா பறிமுதல்







(கல்குடா நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓட்டமாவடி மற்றும் வாழைச்சேனை பிரதேசத்தில் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினரால் நேற்று முன்தினம் (19) மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பதுக்கிய பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக மட்டக்களப்பு மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் உதவிப் பணிப்பாளர் ஆர்.எவ்.அன்வர் சதாத் தெரிவித்தார்.

சோதனை நடவடிக்கையானது மட்டக்களப்பு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் உதவிப் பணிப்பாளர் ஆர்.எவ்.அன்வர் சதாத் தலைமையில் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் சகிதம் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமைய ஓட்டமாவடி மற்றும் வாழைச்சேனை பிரதேசத்தை அண்டிய பகுதிகளிலுள்ள வியாபார நிலையங்களில் பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில், அரிசியை கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்த விற்பனை நிலையங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், குறித்த விற்பனை நிலையங்களில் கட்டுப்பாட்டு விலைக்கு அரிசியை விற்பனை செய்வதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

அத்தோடு ஹாட்வெயார் ஒன்றில் விலையை அழித்து விற்பனை செய்தமை தொடர்பில் உடைமைகள் பறிமுதல் செய்யப்பட்டதுடன், விற்பனை நிலையங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அத்துடன், சில்லறை வியாபார நிலையமொன்றில் பழைய விலையில் பதுக்கிவைக்கப்பட்ட பால்மாக்கள் பறிமுதல் செய்யப்பட்டு, பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக வியாபார நிலையங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகள் நடைபெறுவதுடன், அரிசியை கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்வதையும், பொருட்களை பதுக்கிவைத்து விற்பனை செய்பவர்களையும் பிடித்து சட்டநடவடிக்கை மேற்கொண்டு வருவதாக மட்டக்களப்பு மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் உதவிப் பணிப்பாளர் ஆர்.எவ்.அன்வர் சதாத் தெரிவித்தார்.

# கல்முனைப் பிராந்தியத்தில் கடற்றொழில் பாரிய வீழ்ச்சி; இயந்திரப்படகு மீன்பிடி முற்றாக செயலிழக்கும் அபாயம்

## எரிபொருள் வழங்க விசேட ஏற்பாடு தேவையென கோரிக்கை

(சாய்ந்தமருது நிருபர்)

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கல்முனைப் பிராந்தியத்தில் கடற்றொழில் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பதைக் கவனத்திற்கொண்டு, இப்பகுதி கடற்றொழிலாளர்கள் இலகுவான முறையில் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் - என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாளிகைக்காடு கிழக்கு அமைப்பாளர் எம்.எச்.எம்.நாஸர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் முன்வைத்துள்ள அந்த வேண்டுகோளில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் கணிசமானளவு பங்களிப்பு செய்துவந்த மீன்பிடித்தொழில் கடந்த சில மாதங்களாக பாரிய வீழ்ச்சி கண்டிருக்கிறது. மீன்பிடித் தொழிலில் ஈடுபடுத்தப்படும் இயந்திரப் படகுகளுக்கு டீசல், மண்ணெண்ணெய் போன்ற எரிபொருள் போதியளவு கிடைக்காமையினாலேயே இவ்வாறு கடல் வளப் பொருளாதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது.

அதிலும் கடற்றொழிலுக்கு பிரசித்திபெற்ற கிழக்கு மாகாணத்தின் கல்முனைப் பிராந்தியத்தில் இயந்திரப்படகுகள் மூலமான மீன்பிடித் தொழில் முற்றாக செயலிழந்துபோகும் அபாயத்தை எதிர்நோக்கியிருக்கிறது. இதனால் கடற்றொழிலை ஜீவனோபாயமாகக்கொண்ட மீனவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாக மாறியுள்ளதுடன், இப்பிரதேசங்களில் மீன்களுக்கு பாரிய தட்டுப்பாடு



ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக மீன்களின் விலைகள் பன்மடங்காக அதிகரித்திருக்கின்றன. தற்காலத்தில் மீன் வாங்குவதென்பது முயற்கொம்பாக மாறியிருக்கிறது.

மாட்டிறைச்சி, கோழி இறைச்சி மற்றும் மரக்கறி வகைகளின் விலைகளும் அதிகரித்திருக்கின்ற சூழ்நிலையில், மீன்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற தட்டுப்பாடு காரணமாக மக்கள் அன்றாட உணவுக்கு திண்டாடி வருகின்றனர். போதியளவு எரிபொருள் கிடைக்குமாயின் மீன்பிடித் தொழிலை சிறப்பாக முன்னெடுக்க முடியுமாக இருக்கும். ஆனால், எரிபொருட்களை பெற்றுக்கொள்வதில் கல்முனைப் பிராந்திய மீனவர்கள் மிகுந்த சிரமங்களையும் சவால்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

மக்களுடன் மக்களாக வரிசைகளில் நின்றே மீன்பிடித் தொழிலுக்கான எரிபொருளையும் பெற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது. அதுவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே வழங்கப்படுகிறது. அதேவேளை, பல நாட்கள் வரிசைகளில் காத்து நின்றும்கூட எரிபொருள் கிடைக்காமல் ஏமாற்றத்துடன் வீடு திரும்பவேண்டிய நிலைமையும் ஏற்படுகிறது.

எனினும், தென்னிலங்கை மற்றும் யாழ். குடாநாட்டின் சில பகுதிகளிலும் கடற்றொழில் திணைக்களம் மற்றும் பிரதேச செயலகங்களின் ஏற்பாட்டில் மீன்பிடித் தொழிலுக்கென விசேட முன்னுரிமையளித்து எரிபொருள் வழங்கப்படுவதை ஊடகங்கள் வாயிலாக அறியக்கிடைக்கிறது.

இவ்வாறு கல்முனைப் பிராந்தியத்திலும் மீன்பிடித் தொழிலுக்கென எரிபொருட்களை பெற்றுக்கொடுப்பதற்கு இலகுவான முறைமையொன்றை அமுல்படுத்த பிராந்திய கடற்றொழில் திணைக்களக் காரியாலயம் அவசர நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும். இவ்விடயத்தில் பிரதேச செயலகங்களும் கூடிய கரிசனை செலுத்த வேண்டும்.

இவ்விடயத்தை பிரதமர், கடற்றொழில் அமைச்சர் மற்றும் எரிசக்தி அமைச்சர் போன்றோரின் கவனத்திற்கு கொண்டுசென்று, உரிய நடவடிக்கைகளை அவசரமாக முன்னெடுக்கச் செய்வதற்கு அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் துரிதமாக செயற்பட முன்வர வேண்டும் - என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# மெக்சிக்கோ எச்.எம்.எஸ்.பி. துறவற சபையின் 25ஆம் ஆண்டு நிறைவு விசேட திருப்பலி மட்டக்களப்பில் ஒப்புக்கொடுப்பு







(மட்டக்களப்பு நிருபர்)

மெக்சிக்கோ எச்.எம்.எஸ்.பி. துறவற சபையின் 25ஆம் ஆண்டு நிறைவு விசேட திருப்பலியொன்று மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் கலாநிதி பொன்னையா ஜோசெப் ஆண்டகை தலைமையில் மட்டக்களப்பு கல்லடி டச்பார் புனித இஞ்ஞாசியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மெக்சிக்கோ எச்.எம்.எஸ்.பி. துறவற சபையின் அருட்சகோதரிகள் தமது ஆன்மீக மறை பணிக்காக இலங்கைக்கு வருகை தந்து கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக இலங்கையில் மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் மட்டக்களப்பு கல்லடி டச்பார் புனித இஞ்ஞாசியார் ஆலய பங்கில் தமது ஆன்மீக மறை பணியினை முன்னெடுத்து வருகின்றனர்.

தமது துறவற சபை ஆரம்பிக்கப்பட்டு 25ஆம் ஆண்டு நிறைவு பெற்றுள்ள நிலையில், அதனை சிறப்பிக்கும் வகையில் மறைமாவட்ட ஆயர் கலாநிதி பொன்னையா ஜோசெப் ஆண்டகையின் விசேட அனுமதியுடன் பங்குத்தந்தை லோரன்ஸ் லோகநாதன் அடிகளாரின் ஆலோசனையுடன் மறைமாவட்ட ஆயர் கலாநிதி பொன்னையா ஜோசெப் ஆண்டகையின் தலைமையில் இடம்பெற்றது.

திருவுடல் திரு இரத்த பெருவிழா திருப்பலியுடன் மெக்சிக்கோ எச்.எம்.எஸ்.பி. துறவற சபையின் 25ஆம் ஆண்டு வெள்ளிவிழா விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இத்திருப்பலியில் மெக்சிக்கோ எச்.எம்.எஸ்.பி. துறவற சபையின் மதர் ஜெனரல் அருட் சகோதரி எஸ்.மெரேல்டா உட்பட அருட் தந்தையர்கள், அருட் சகோதரிகள், பங்கு மக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

மெக்சிக்கோ எச்.எம்.எஸ்.பி. துறவற சபையின் அருட் சகோதரிகளின் ஒழுங்கமைப்பில் துறவற சபையின் 25ஆவது ஆண்டு நிறைவினை சிறப்பிக்கும் வகையில் இடம்பெற்ற விசேட திருப்பலியில் கலந்துகொள்வதற்காக வருகை தந்த மெக்சிக்கோ எச்.எம்.எஸ்.பி. துறவற சபையின் மதர் ஜெனரல் அருட் சகோதரி எஸ்.மெரேல்டா அருட் சகோதரிக்கு அருட்சகோதரிகளினால் பொன்னாடை போர்த்தி பங்குமக்களினால் பரிசுகள் வழங்கி கௌரவிப்பு செய்தமை குறிப்பிடத்தக்கது.

# மண்ணெண்ணெய் விளக்கு தீப்பிடித்ததில் ஏறாவூரில் குடும்பப்பெண் பரிதாப உயிரிழப்பு

(கல்லடி நிருபர்)

ஏறாவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முருகன் கோயில் வீதி மயிலெம்பாவெளி பிரதேசத்தைச் சேர்ந்த வயோதிபப் பெண்ணொருவர் மண்ணெண்ணெய் விளக்கு நிலத்தில் விழுந்து தீப்பிடித்ததில் பலியான சம்பவம் கடந்த சனிக்கிழமை (18) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முருகன் கோயில் வீதி மயிலெம்பாவெளி பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயாரான கிருஷ்ணபிள்ளை வள்ளிப்பிள்ளை என்பவரே பலியானவராவார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள மின்வெட்டு காரணத்தினால் வீட்டிலிருந்த மண்ணெண்ணெய் விளக்கை குறித்த பெண் சிறுநீர் கழிப்பதற்காக வெளியில் எடுத்துச்செல்லும்போது விளக்கு தவறுதலாக நிலத்தில் விழுந்து தீப்பிடித்த நிலையில், அயலவர்களின் உதவியுடன் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லும்போது மரணமடைந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது

ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வேண்டுதலுக்கமைவாக சம்பவ இடத்திற்குச் சென்ற பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நசீர் சடலத்தைப் பார்வையிட்டதுடன், பிரேத பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் உறவினர்களிடம் ஒப்படைத்தார்.

மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட முரண்பாட்டில் மிளகாய்த்தூள் தாக்குதல்

## திருகோணமலையில் ஐவர் வைத்தியசாலையில்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, ரொட்டவெவ, மிரிஸ்வெவ பகுதியில் இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட கைகலப்பில் 05 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று (20) காலை இடம்பெற்றுள்ளது.

கடந்த 3 நாட்களுக்கு முன்னர் ஏற்பட்ட கை கலப்புடன் தொடர்புடைய குறித்த இரு குழுக்களுக்கிடையே தொடர்ந்தும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், கடைக்குச் சென்ற சிறுவனை தாக்கியதுடன், மிளகாய்த்தூள் வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனால் மூன்று சிறுவர்கள் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேநேரம் மற்றைய குழுவில் மூன்று சிறார்கள் தங்களை தாக்கியதாக 1990 அவசர அம்பியூலன்ஸ் மூலமாக அழைத்துவரப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. சம்பவத்துடன் தொடர்புடைய குறித்த 05 சிறுவர்களில் 03 பேர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவத்தில் 16 வயதுக்கு குறைந்தவர்களே அடங்குவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் மொரவெவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## போடியார் புலம்பல்!



கோட்டா விலகாதவரை எந்த உதவியும் இல்ல எண்டதுதான் சம்பந்தர் தொடக்கம் சஜீத் வரை சொல்லுறாங்க. சரிடா தம்பி அவரும் விலகிறமாதிரி இல்ல. அணுங்கு பிடியா இருக்கு. பக்கத்தில குந்தி இருந்து கொட்டாவி உடுற குள்ளநரி ரணிலும் மக்கள அச்சுறுத்தி காலத்த இழுக்கடிக்ககுள என்ன கோதாரிய செய்யலாம். ஒரு வேள சூனியம் செய்து அந்த ஆள கிளப்பலாம் எண்டாவது பார்க்கத்தான் வேணும். ஆரப்புடிச்சாவது அதயாவது செய்யுங்கப்பா.

# கிழக்கு பல்கலைக்கழக வேந்தருக்கு ஒளிக்கல்லூரியால் கௌரவிப்பு




(கல்லடி நிருபர்)

கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு புதிய வேந்தராக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட பேராசிரியர் மா.செல்வராசாவை வரவேற்று கௌரவிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை (18) முனைக்காடு விவேகானந்த மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) இடம்பெற்றது.

ஒளிக்கல்லூரி அமைப்பின் ஏற்பாட்டில், ஒளிக்கல்லூரியின் அதிபர் மு.நமசிவாயம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பேராசிரியர் செ.யோகராசா, வெல்லவூர் கோபால், ஓய்வுநிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் தெ.சுப்பிரமணியம், ஓய்வுநிலை கொத்தணி அதிபர் சி.சந்திரசேகரம் ஆகியோர் அதிதிகளாக கலந்துகொண்டிருந்தனர்.

ஓய்வுநிலை ஆசிரியர் மத்திய நிலைய முகாமையாளர் சி.குருபரன், ஓய்வுநிலை அதிபர்களான மா.வன்னியசிங்கம், வே.மகேசரெத்தினம், அதிபர் மா.சத்தியநாயகம் ஆகியோர் வேந்தர் மா.செல்வராசாவின் சமூக, கல்வி, ஆன்மிகப் பணிகள் தொடர்பிலான உரையாற்றினர்.

ஒளிக்கல்லூரி அமைப்பின் ஸ்தாபகராக செயற்பட்டு படுவான்கரை கல்வி வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தவர் என்பதனை இதன்போது யாவரும் குறிப்பிட்டிருந்தனர்.

# உலக செய்திகள்

## 118ஆவது நாளாக தொடரும் உக்ரைன் – ரஷ்யப் போர்:

# 77இலட்சம் பேர் அகதிகளாக அண்டை நாடுகளில் தஞ்சம்

உக்ரைன் மீது ரஷ்யாவின் மோதல் இன்று 118ஆவது நாளாகவும் தொடர்கிறது.

இந்நிலையில், உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி நேற்று போரால் பாதிக்கப்பட்ட தெற்கு முன்னணிப் பகுதிக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.


போர் பாதிப்புகளை பார்வையிட்ட ஸெலென்ஸ்கி....

நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர்த் தொடுத்தது. போரால் உக்ரைன் தலைநகர் கீவ் மற்றும் கார்கீல் மரியுபோல் உள்ளிட்ட பல்வேறு நகரங்கள் உருக்குலைந்துள்ளன. போரால் இதுவரை 77 இலட்சம் பேர் உக்ரைனிலிருந்து வெளியேறி அண்டை நாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

இந்நிலையில், போரால் பாதிக்கப்பட்ட மைக்கோலைவ் நகருக்குச் சென்ற ஸெலென்ஸ்கி, சேதமடைந்த கட்டடங்களை ஆய்வு செய்தார். இராணுவ வீரர்கள், அதிகாரிகள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களை சந்தித்தார். தொடர்ந்து மேற்கு நகரமான ஒடேசாவிற்கும் விஜயம் செய்தார். கருங்கடல் கடற்கரையை கைப்பற்றும் ரஷ்யாவின் முயற்சிகளில் இரு நகரங்களும் இலக்குகளாகவுள்ளன.

**செவரோடோனெட்ஸ்கில் 24 மணிநேர போர்**

செவரோடோனெட்ஸ்கில் 24 மணிநேரமும் ரஷ்யாவுடன் உக்ரைனின் படைகள் போரிட்டு வருவதாகவும், எதிரி படைகள் தொடர்ந்து தடைசெய்யப்பட்ட வெடிமருந்துகளைப் பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

**ரஷ்யா தானிய ஏற்றுமதி தடுப்பை நிறுத்தவேண்டும் - ஜேர்மனி**

கருங்கடலிலுள்ள உக்ரைனின் முக்கிய துறைமுகங்களிலிருந்து தானிய ஏற்றுமதியை தடுக்கும் நடவடிக்கையை ரஷ்யா நிறுத்தவேண்டும் என ஜேர்மனி பிரதமர் ஓலப் ஷோல்ஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து பேசிய அவர், உணவு தானிய ஏற்றுமதிக்கு பாதுகாப்பான வழித்தடத்தை அமைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாகவும், பாதுகாப்பான போக்குவரத்தை ரஷ்யா செயற்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், ரஷ்யா அந்த வழித்தடத்தை படையெடுப்பிற்கு பயன்படுத்த மாட்டோம் என நம்பகமான உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்றும் ஓலப் ஷோல்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

**உக்ரைனிய வீரர்கள் சிறைப்பிடிப்பு**

மரியுபோல் உருக்காலையை பாதுகாக்கும்போது ரஷ்யப் படைகளிடம் சிக்கிய உக்ரைனின் முக்கிய தளபதிகள் இருவர் விசாரணைக்காக ரஷ்யா அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

மரியுபோல் உருக்காலையில் பதுங்கி தாக்குதல் நிகழ்த்தி வந்த அசோவ் படைப் பிரிவைச் சேர்ந்த 1,000இற்கும் மேற்பட்ட உக்ரைன் வீரர்களை ரஷ்யப் படைகள் சிறைப்பிடித்துள்ளன.

அவர்கள் விசாரணைக்காக ரஷ்யா அழைத்து செல்லப்பட்டுள்ளதால் அவர்களின் எதிர்காலம் குறித்து உக்ரைன் அச்சம் தெரிவித்துள்ளது.

**ஆயுத உதவித் திட்டத்துக்கு நேட்டோ அனுமதி**

மாட்ரிட்டில் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள நேட்டோ மாநாட்டில், உக்ரைனுக்கு உதவி ஆயுத தொகுப்பு வழங்கும் முடிவுக்கு அனுமதி வழங்கப்படும் என நேட்டோ செயலாளர் ஜெனரல் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் நீண்ட காலத்துக்கு நீடிக்கும் எனவும், நேட்டோ அமைப்பால் வழங்கப்படும் உதவித்தொகுப்பு டான்பாஸ் பிராந்தியத்தை ரஷ்ய ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க உதவும் எனவும் தெரிவித்துள்ளார்.

**வன்கொடுமை தொடர்பில் ரஷ்ய இராணுவத்திடம் விசாரணை**

உக்ரைன் தற்காலிகமாக ஆக்கிரமிக்கப்பட்ட உக்ரைன் பகுதிகளில் குறைந்தது 14 பெண்களைக் மிரட்டி பாலியல் வன்கொடுமை செய்தாக ரஷ்ய சிப்பாய்களுக்கு எதிராக 19 கிரிமினல் நடவடிக்கைகளை கீவ் தொடங்கியுள்ளதாக உக்ரைனின் துணை வழக்குரைஞர் ஜெனரல் தெரிவித்துள்ளார். ''ஒவ்வொரு குற்றவாளியும் தண்டிக்கப்பட வேண்டும்'' என்று கியுண்டுஸ் மாமெடோவ் தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

## பிலிப்பைன்ஸ் துணை ஜனாதிபதியாக டுடேர்த்தேவின் மகள் பதவியேற்பு



பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ரொட்ரிகோ டுடேர்த்தேவின் (Rodrigo Duterte) மகள் சாரா (வயது 43), அந்த நாட்டின் துணை ஜனாதிபதியாக பொறுப்பேற்றுக்கொண்டார்.

கடந்த மாதம் 9ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் சர்வாதிகாரி ஃபெர்டினண்ட் மார்கோஸின் மகன் ஜூனியர் மார்க்கோஸும் துணை ஜனாதிபதியாக சாரா டுடேர்த்தேவும் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அவர் தற்போது பதவிப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார். புதிய ஜனாதிபதியாக மார்க்கோஸ் எதிர்வரும் 30ஆம் திகதி பொறுப்பேற்கவுள்ளார்.

முன்னாள் சர்வாதிகாரியின் மகனும் சர்ச்சைக்குரிய ஜனாதிபதியின் மகளும் பிலிப்பைன்ஸின் ஜனாதிபதி, துணை ஜனாதிபதியாக இருப்பது மனித உரிமை ஆர்வலர்களை கலக்கமடையச் செய்துள்ளது.



**இன்று (21ஆம் திகதி) சர்வதேச யோகா தினமாகும். ஜம்மு காஷ்மீர் தாவி நதிக்கரையோரம் யோகா பயிற்சியில் ஈடுபட்டிருந்த பெண்கள்....**

## ஸ்பெயினை வாட்டி வதைக்கும் வெப்பம்: குளிர்ச்சியான பகுதிகளுக்கு படையெடுக்கும் மக்கள்



ஐரோப்பிய நாடுகளில் தற்போது கடும் வெப்பநிலை பதிவாகி வருகிறது. அந்தவகையில் ஸ்பெயின், பெரிஸ், பிரான்ஸ், மற்றும் பிற மேற்கு ஐரோப்பிய நாடுகள் வெப்ப அலையை எதிர்கொள்கின்றன.

குறிப்பாக, ஸ்பெயினில் 40 ஆண்டுகளில் இல்லாதளவுக்கு கடும் வெப்பம் பதிவாகியுள்ளது. சில பகுதிகளில் 40 டிக்ரி செல்ஸியஸ் வெப்பநிலை பதிவானதுடன், இரவு நேரங்களிலும் வெப்பநிலை வழக்கத்திற்கு மாறாகவுள்ளது.

சுட்டெரிக்கும் வெயிலின் தாக்கத்திலிருந்து தப்பிக்க பொதுமக்கள் குளிர்ச்சியான பகுதிகளை நோக்கி படையெடுத்து வருகின்றனர். தலைநகர் மாட்ரிட்டில் நீர் ஊற்றுகளில் குவிந்த மக்கள் தண்ணீரில் விளையாடியும், மரங்களின் நிழல்களில் படுத்துறங்கியும் வெப்பத்தை தணித்துக்கொண்டு வருகின்றனர். அங்குள்ள கட்டடங்களை குளிர்விக்க தண்ணீர் தெளிக்கப்படுகிறது.

வழக்கத்தை விட இந்த ஆண்டு கோடை காலம் முன்கூட்டியே தொடங்கியதும், சகாரா பாலைவனம், வடக்கு ஆபிரிக்க நாடுகளிலிருந்து வரும் சூடான காற்றுமே தீவிர வெப்பத்திற்கு காரணம் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். எனினும், இந்த வெப்பநிலை தாக்கமானது குறையத் தொடங்கும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதனிடையே ஸ்பெயினில் வெப்ப அலையால் கட்டுக்கடங்காத காட்டுத் தீ பரவியுள்ளது. கட்டலோனியா காட்டுத் தீயில் 500 ஹெக்டேயர் பரப்பளவிலான காடுகள் அழிக்கப்பட்டன.

## அதீத வளர்ச்சியடையும் காதுகள்



பாகிஸ்தான் கராட்சி மாகாண ஆட்டுப்பண்ணையொன்றில் கடந்த 2 வாரங்களுக்கு முன்னர் ஆடொன்று குட்டியொன்றை ஈன்றுள்ளது.

அந்த ஆட்டுக்குட்டியின் காது மற்ற ஆட்டுக்குட்டிகளின் காதை விட மிகவும் நீளமாக இருந்ததைக் கண்டு அதன் உரிமையாளர் முகம்மது மிகவும் ஆச்சரியமடைந்தார். அந்த ஆட்டுக்குட்டிக்கு சம்பா என பெயரிட்டுள்ளதுடன், அதன் காது எவ்வளவு நீளமாக உள்ளது என அளவெடுத்துள்ளார்.

அதில் ஒவ்வொரு காதும் 19 அங்குல நீளமாகும். அதாவது சுமார் 50 சென்டிமீற்றர் நீளமாகும். பிறந்து 2 வாரங்களேயான ஆட்டுக்குட்டிக்கு 50 சென்டிமீற்றர் நீளமான காது இருப்பது அப்பகுதி மக்களிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

## மழை – வெள்ளத்தில் தத்தளிக்கும் அசாம்: 62 பேர் பலி; 1.50 பேர் முகாம்களில் தஞ்சம்



இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான அசாமில் தொடர்ந்தும் கடும் மழை பெய்துவருவதால் மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மழை மற்றும் வெள்ளப்பெருக்கில் சிக்கி இதுவரை 62 பேர் உயிரிழந்துள்ளதுடன், 1.50 இலட்சம் பேர் வீடுகளை விட்டு வெளியேறி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

இதேவேளை, பீகார் மாநிலத்தில் மின்னல் தாக்கி 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

அசாம், திரிபுரா, மேகாலயா உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக பல இடங்களில் வெள்ளப்பெருக்கும், மண்சரிவும் ஏற்பட்டுள்ளன. அசாமில் நிலைமை மிகவும் மோசமாகவுள்ளது.



அசாமில் பர்பேடா, தராங், கரீம்கஞ்ச், சோனிட்பூர் உள்ளிட்ட மாவட்டங்கள் முழுமையாக வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன. வெள்ளம் மற்றும் மண்சரிவில் சிக்கி இதுவரை 62 பேர் உயிரிழந்துள்ளனர். பல கிராமங்கள், மாநிலத்தின் பிற பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டுள்ளன. தேசிய பேரிடர் மீட்புப் படையினர், படகு மற்றும் ஹெலிகொப்டர்கள் வாயிலாக மீட்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மாநிலம் முழுதும், 1.50 இலட்சம் பேர் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். கோபிலி, பிரம்மபுத்ரா, ஜியா பராலி உள்ளிட்ட நதிகளில் வெள்ளம் அபாய கட்டத்தை தாண்டி பாய்கிறது. வெள்ள பாதிப்பு பகுதிகளை அசாம் முதலமைச்சர் ஹிமந்த பிஸ்வா சர்மா ஆய்வு செய்தார். அவரை தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்ட பிரதமர் மோடி, வெள்ள பாதிப்பு குறித்த விபரங்களை கேட்டறிந்தார். திரிபுரா, மேகாலயா மாநிலங்களிலும் வெள்ள பாதிப்பு அதிகரித்துள்ளது.

## ரஷ்யர்களுக்கு விஷம் கலந்த செர்ரி பழங்களை பரிசளித்த உக்ரைன் விவசாயிகள்



உக்ரைன் விவசாயிகள் தங்கள் வயலில் விளைந்த செர்ரி பழங்களை விஷமாக்கி ரஷ்யாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்த நிலையில் உக்ரைன் Melitopol நகரத்தைக் கைப்பற்றிய ரஷ்ய வீரர்கள் விஷம் தோய்ந்த செர்ரிகளை அபகரித்துச் சென்றனர்.

இது ரஷ்ய வீரர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட பரிசு என்று உக்ரைன் தெரிவித்துள்ளது. செர்ரி பழங்களை உண்ட ரஷ்ய வீரர்களுக்கு உடல் நல பாதிப்பு ஏற்பட்டதாக ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உக்ரைனின் மெலிட்டோபோல் நகரில் சுமார் 2 ஆயிரம் ஹெக்டேயர் நிலத்தில் பல ஆயிரக்கணக்கான தொன்கள் செர்ரி பழங்கள் விளைகின்றன.

## எத்தியோப்பியாவில் அம்ஹாரா இனக் குழு மீது தாக்குதல்: 230 பேர் பலி



எத்தியோப்பியாவில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் அம்ஹாரா என்ற இனக் குழுவைச் சேர்ந்த 230 பேர் உயிரிழந்தனர்.

இது தொடர்பில்அசோசியேடட் பிரஸ் நிறுவனம் வெளியிட்ட செய்தியில்,

எத்தியோப்பியாவிலுள்ள ஜிம்பி என்ற பகுதியில் ஒரோமா விடுதலை இராணுவம் (ஓஎல்ஏ) என்ற தீவிரவாத அமைப்பினர் மீது பாதுகாப்புப் படைகள் தாக்குதல் நடத்தின. இதனால் ஆத்திரமடைந்த ஓஎல்ஏ அமைப்பினர், அப்பகுதியில் அம்ஹாரா இனக் குழுவினர் வசிக்கும் இடத்துக்குச் சென்று தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதல் குறித்து சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர் தெரிவிக்கையில், ''இதுவரை 230 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலும் சடலங்கள் மீட்கப்பட்டு வருகின்றன. இந்தத் தாக்குதலை ஓஎல்ஏ அமைப்பினர் நடத்தினர்'' என்று தெரிவித்தார்.

எனினும், இந்தத் தாக்குதல் தொடர்பாக தனது அமைப்பின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை ஓஎல்ஏ செய்தித் தொடர்பாளர் மறுத்துள்ளார்.

அவர் தெரிவிக்கையில்,

''ஓஎல்ஏ அமைப்பினர் நடத்திய தாக்குதலை தொடர்ந்து ஜிம்பியிலுள்ள முகாமிலிருந்து இராணுவத்தினர் தப்பித்துச் சென்றனர். அதன்பின்னர் அவர்கள் அம்ஹாரா இனக் குழுவினர் வசிக்கும் இடத்துக்குச் சென்றனர். அந்தக் குழுவினர் ஓஎல்ஏ அமைப்புக்கு ஆதரவளித்து வருவதால், அம்ஹாரா மக்கள் மீதும், அவர்களின் உடைமைகள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர்'' என்றார்.

## எல்லாம் தலைகீழாப் போச்சு..!



ருமேனியாவின் அவ்ரிக் நகரத்திலுள்ள ஃபேகராஸ் மலையடிவாரத்தில் அமைந்துள்ள பிராம்புரா அட்வென்ச்சர் பார்க்கில் தலைகீழாக கட்டப்பட்டுள்ள வீடு சுற்றுலாப் பயணிகளை வெகுவாக கவர்ந்து வருகிறது.

7 டிகிரி சாய்வாக கட்டப்பட்டுள்ள அந்த வீட்டில் சிறிய சிறிய பொருட்கள் கூட தலைகீழாகவே வைக்கப்பட்டுள்ளன.

பார்க் வளாகத்திற்குள் உணவகம், மதுபான பார், சிறிய உயிரியல் பூங்கா மற்றும் குழந்தைகளை மகிழ்விக்கும் பல்வேறு சிறப்பம்சங்களும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சமூக சேவையாளர் ஸவாஹிரின் திடீர் மறைவு சமூகத்துக்கு பேரிழப்பு

## இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் அனுதாபம்

(பீ.எம்.முக்தார்)

பேருவளையின் முன்னணி இரத்தினக்கல் வர்த்தகரும் சமூக சேவையாளருமான ஏ.எச்.எம். ஸவாஹிர் ஹாஜியாரின் திடீர் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பேருவளையின் பாரம்பரிய வைத்தியர் மர்ஹூம் அப்துல் ஹமீதின் புதல்வரான மர்ஹூம் ஸவாஹிர் ஹாஜியார் ஊரிலுள்ள பல்வேறு அமைப்புகளில் அங்கம் வகித்து, பிரதேச வாழ் மக்களின் உயர்வுக்காக மகத்தான பல பணிகளைச் செய்தார்.

எனது தந்தையோடும், என்னோடும் இணைந்து மிக நெருக்கமாக செயற்பட்ட இவர் அல்-பாஸியதுல் நஸ்ரியா கல்லூரியை கட்டியெழுப்பவும், அல்-பாஸி அரபுக் கல்லூரியை முன்னேற்றவும் இரவு, பகல் பாராது பணி செய்தவர். அப்ரார் கல்வி நிலையத்தின் மூலமாக வறிய மாணவர்களின் கல்விக் கண்களை திறந்து பாரிய சேவைகளை செய்தார். முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனம் மூலமும் பல் நற்பணிகளை செய்து மக்கள் மனதை வென்றார்.

சமூக உணர்வும், நற்பண்பும், ஆன்மீக பறிபக்குவமும் உடைய ஸவாஹிர் ஹாஜியார் ஷாதுலிய்யா தரீக்காவின் வளர்ச்சிக்கும் பாடுபட்டார்.

மர்ஹூம் ஸேம் ரிபாய் ஹாஜியார் மூலமாகவும் ஏழை, எளிய குடும்பங்களின் வீடுகளுக்கு நீர் மற்றும் மின்சார வசதியினை செய்து கொடுத்து சமூகத்திற்கு அழியாச் சேவைகளை செய்துள்ளார். இவர் மூலமாக பல ஆயிரக்கணக்கான வறிய குடும்பங்கள் தமது இல்லங்களுக்கு இலவசமாக நீர், மின்னிணைப்பை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

முன்னாள் சபாநாயகரான எனது தந்தையின் அரசியல் வெற்றிக்காகவும், எனது அரசியல் வெற்றிக்காகவும் இவர் கடுமையாக உழைத்ததை என்றும் மறக்கவே முடியாது.

அன்னார் சமூகத்திற்கும், ஊருக்கும் செய்த நற்பணிகளை அங்கீகரித்து மேலான ஜன்னதுல் பிர்தௌஸ் சுவர்க்கம் கிடைக்க பிரார்த்திக்கின்றேன் என அவர் தெரிவித்துள்ளார்.

# பெரியபாடு கடற்பகுதியில் 543 கிலோ கஞ்சா மீட்பு

## பொலிஸார், கடற்படையினர் தீவிர விசாரணை



(ரஸீன் ரஸ்மின்)

உடப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியபாடு கடற்பிரதேசத்தில் இருந்து 543 கிலோ கிராம் கேரள கஞ்சா கடற்படையினரால் நேற்றுமுன்தினம் (19) கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவின் மொத்த பெறுமதி 130 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

வடமேற்கு கடற்படை கட்டளையின் புத்தளம் தம்பபண்ணி கடற் படையினர் நேற்றுமுன்தினம் வழமை போல உடப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சின்னப்பாடு - பெரியபாடு கடற்பிரதேசத்தில் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது, கடலில் சில பொதி செய்யப்பட்ட சில மூடைகள் மிதந்து கொண்டு வருவதனை அவதானித்த கடற்படையினர் அதனை கைப்பற்றி பார்வையிட்டுள்ளனர்.

இதன்போதே, கேரள கஞ்சா இருப்பது தெரியவந்துள்ளது. இதனையடுத்து கடலில் மிதந்து வந்த அனைத்து பொதிகளையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

173 மூடைகளில் ஒரு கிலோ வீதம் அடைக்கப்பட்டிருந்த 543 கிலோ கிராம் (ஈரமான எடை) கேரள கஞ்சா பொதிகள் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட குறித்த கேரள கஞ்சாவை கடல்மார்க்கமாக இலங்கைக்கு கடத்த திட்டமிட்டிருந்த சந்தேக நபர்கள், அதனை கரைக்கு கொண்டு வர முடியாமல் கடலிலேயே வீசிவிட்டு தப்பிச் சென்றிருக்கலாம் என தாம் நம்புவதாக கடற்படையினர் குறிப்பிட்டுள்ளனர்.

மேற்படி கேரள கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டமையை அடுத்து, சின்னப்பாடு - பெரியபாடு பகுதியில் கடற்படையினர் மேலதிக தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும், கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா பொதிகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக உடப்பு பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் கடற்படையினர் கூறியுள்ளனர். இது தொடர்பில் பொலிஸாரும் கடற்படையினரும் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# போதைப்பொருள் விழிப்புணர்வுக் கூட்டம் பேருவளையில்



(பீ.எம் முக்தார்)

பேருவளை மாளிகாஹேனை பெலஸ்பாத் ஷாதுலிய்யா ஸாவியாவில் போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு கூட்டம் நேற்று முன்தினம் (19)ஸாவிய்யா நிர்வாக சபைத் தலைவரும் களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாழிப முன்னணிகள் சம்மேளனத் தலைவருமான அல்ஹாஜ் இக்பால் ஸம்ஸுத்தீன் ஜே.பி தலைமையில் நடைபெற்றது.

மேற்படி ஸாவிய்யா நிர்வாக சபையும் பேருவளை வை.எம்.எம்.ஏ அமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்த இந்த விழிப்புணர்வுக் கூட்டத்தில் பேருவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லலித் பத்மகுமார கலந்து கொண்டு விசேட சொற்பொழிவாற்றினார்.

பேருவளை வை.எம்.எம்.ஏ தலைவர் அப்துல் காதர், பெலஸ்பாத் ஸாவியா தர்மகர்த்தாக்களான ஜெஸ்மி ஜாபிர், ராமிஸ் ஸுபைர், அஹ்ஸார் ஹுஸைன், பேருவளை வை.எம்.எம்.ஏ. முக்கியஸ்தர் முஹம்மத் பர்ஹான் உட்பட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பிரதேசத்தில் இளம் சந்ததியினர் மத்தியில் போதைப் பொருள் பாவனை ஏற்பட வண்ணம் முன்னெச்சரிக்கையாக பிரதேசவாசிகளுக்கு விழிப்பூட்டும் வகையில் இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

போதைப்பொருள் பாவனையானது, சமூகத்தின் பாரிய பிரச்சினையாக தற்போது உருவெடுத்துள்ளது. இந்தப் பேரழிவிலிருந்து உங்கள் பிள்ளைகளை பாதுகாத்துக்கொள்ள வேண்டும். இன்று 70வீதமான திருட்டு, அபகரிப்பு, கொள்ளை மற்றும் பாலியல் ரீதியான சமூக விரோத செயல்கள் போதைப் பொருள் பாவனையினாலே ஏற்படுகிறது. பெற்றோர்கள், பிரதேசத்தில் உள்ள சமூகநல விரும்பிகள், இளம் சந்ததியினரை போதைப்பொருள் பாவனையிலிருந்து மீட்டெடுக்க தம்மாலான பங்களிப்பை வழங்க முன்வர வேண்டும் என பேருவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லலித் பத்ம குமார குறிப்பிட்டார். பிரதேசத்தில் போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனை செய்வோர் இருப்பின் தமக்கு தகவல் தருமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

# புத்தளம் ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் விசேட ஒன்றுகூடல்



(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் மாவட்ட ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் அங்கத்தவர்களுக்கிடையிலான விசேட ஒன்றுகூடல் நேற்று முன்தினம் (19) புத்தளம் ஐஸ் டோக் மண்டபத்தில் இடம்பெற்றது.

புத்தளம் மாவட்ட ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் எம்.எஸ்.முஸப்பிர் தலைமையில் இடம்பெற்ற இந்த ஒன்றுகூடலில் செயலாளர், பொருளாளர் உட்பட அங்கத்தவர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது, ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தினால் முன்னெடுக்கப்பட்ட பணிகள் பற்றியும், எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்பட இருக்கும் வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

அத்துடன், பாடசாலை மட்ட ஊடக கழகங்களை உருவாக்குதல், பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஊடக கல்வி தொடர்பில் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து பயிற்சிகளை வழங்குதல், ஊடகத்துறையில் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளை அடையாளம் கண்டு அவர்களுக்கு அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகப்பயிற்சிகளை வழங்குதல் உள்ளிட்ட விடயங்கள் பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டன.

இந்த நிலையில், அடுத்த மாதம் முதல் முதற்கட்டமாக முந்தல் பிரதேசத்தில் உள்ள தெரிவுசெய்யப்படும் பாடசாலை மாணவர்களுக்கு ஊடகம் தொடர்பில் கருத்தரங்குகளை வழங்கவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கற்பிட்டி மற்றும் புத்தளம் ஆகிய பகுதிகளிலும் பாடசாலை மாணவர்களுக்கு மேற்படி ஊடக பயிற்சிகள் மற்றும் கருத்தரங்குகள் என்பனவற்றை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளன. அத்துடன், ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் வருடாந்த மாநாட்டை நடத்துவது தொடர்பாகவும் இங்கு பேசப்பட்டன. அடுத்த மாதம் மேற்படி மாநாட்டை நடத்துவது தொடர்பிலும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

இதேவேளை, ஒன்றியத்தின் வருடாந்த மாநாட்டை முன்னிட்டு திறந்த புகைப்பட போட்டி மற்றும் கவிதைப் போட்டி என்பனவற்றை நடத்துவதற்கும் மேற்படி கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சைக்கிள் பாவனையாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பால் விபத்துகளை குறைப்பதற்கான விசேட வழிகாட்டுதல்கள்

(க.கிருபாகரன்)

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக சைக்கிள் பாவனையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், விபத்துகளை குறைப்பதற்கான விசேட வழிகாட்டுதல்களை பொலிஸார் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இதுபோன்ற வழிகாட்டுதல்களை கடைபிடிப்பது குறித்தும் கவனம் செலுத்துமாறு போக்குவரத்து கடமையில் இருக்கும் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந்த வருடத்தில் நேற்றுமுன்தினம் வரை 1,202 வீதி விபத்துகள் இடம்பெற்றுள்ளதாகவும் அதில் 96 சைக்கிள் ஓட்டுநர்கள் உயிரிழந்துள்ளனர் எனவும் பேச்சாளர் குறிப்பிட்டார்.

வீதியில் சைக்கிள் ஓட்டுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர் என்றும் இந்த விடயத்தில் புதிய பாதுகாப்பு விதிமுறைகள் தேவைப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதற்கமைய, இரவு நேரத்தில் சைக்கிள் செலுத்தும் போது, முன்பக்கமும் பின்பக்கமும் பிரதிபலிப்பான்கள் பயன்படுத்துவதால் சைக்கிள் ஓட்டுபவர்களை வாகனம் செலுத்துவோர் இலகுவாக அடையாளம் கண்டுகொள்வர்.

மேலும், சைக்கிள் ஓட்டிகள், குறிப்பிட்ட பிரகாரமான நிற ஆடைகளை அணிந்து இரவில் பயணம் செய்வதால் விபத்துகள் குறையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சைக்கிள் ஓட்டுநர்களும் வீதி சமிக்ஞைகளுக்கு கீழ்ப்படிய வேண்டும் என்றும் வீதிகள் மற்றும் ஒழுங்கைகளை மாறும் போது பின்புறத்தில் உள்ள வாகனங்கள் மீது கவனம் செலுத்த வேண்டும் என்றும் பேச்சாளர் தெரிவித்தார்.

மேலும், சைக்கிள்களைச் செலுத்தும்போது வீதிப் பாதுகாப்பு குறித்து மக்கள் அவதானம் செலுத்த வேண்டும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# உணவுப் பாதுகாப்பில் வழிகாட்டல் குழுவை நிறுவும் இராணுவம்



இலங்கை இராணுவம், தேசிய மற்றும் சரியான நேரத்தில் முக்கியத்துவம் வாய்ந்த மற்றுமொரு மாபெரும் செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் முகமாக கடந்த வியாழக்கிழமை இராணுவத்தின் பசுமை விவசாய வழிகாட்டல் குழுவை நிறுவியுள்ளது. இந்த திட்டமானது நாடு முழுவதும் உள்ள தரிசு அல்லது கைவிடப்பட்ட அரச காணிகள் உள்ளடங்களான ஆயிரத்து 500 ஏக்கர்களில் விவசாயம் மேற்கொண்டு இலங்கை உணவுப் பாதுகாப்பு நிகழ்ச்சி திட்டத்தை மேம்படுத்தும் முகமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு இணங்க, இந்த ஆண்டு ஜூலை மாத தொடக்கத்தில் இவ் அவசர செயற்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகே தலைமையில், பிரதிப் பதவிநிலை பிரதானி மேஜர் ஜெனரல் சன்னவீரசூரிய இத் திட்டத்தின் முகாமைத்துவத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இராணுவ வழங்கல் தளபதி மேஜர் ஜெனரல் இந்துசமரகோன், தலைமை களப் பொறியியலாளர் மேஜர் ஜெனரல் மஹிந்த ஜயவர்தன, உபகரண மாஸ்டர் ஜெனரல் மேஜர் ஜெனரல் பிரசன்ன ரணவக்க, பொது பணி பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் நிஷாந்த மானகே, நிதி முகாமைத்துவப் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் ஷிரான் அபேசேகர, வேளாண்மை மற்றும் கால்நடைகள் பணிப்பாளர், நடவடிக்கை பணிப்பக பணிப்பாளர், ஊடகப் பணிப்பாளர், மின் மற்றும் இயந்திர பொறியாளர்கள் பணிப்பாளர், ஆராய்ச்சி கருத்து ரூ கோட்பாடு பணிப்பாளர், மற்றும் சில சிரேஷ்ட அதிகாரிகள் இந்த குழுவில் உள்ளடங்குவர். இராணுவ பதவிநிலை பிரதானி மேஜர் ஜெனரல் ஜகத்கொடிதுவக்கு திட்டத்தையும் மேற்பார்வையிட உள்ளார்.

ஆரம்ப அமர்வில், இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகே புதிய குழுவிற்கு தேசிய முயற்சியின் நோக்கம் மற்றும் தேசிய இலக்குகளை அடைய விவசாயத் துறையுடன் இராணுவம் எவ்வாறு கைகோர்ப்பது என்பது பற்றி விளக்கியதுடன் எதிர்காலத்தில் உணவு வகைகளுக்கு பற்றாக்குறை ஏற்படாமல் இருக்க, கைவிடப்பட்ட நிலங்களில் உடனடி பயிர்ச்செய்கை மூலம் உணவு உற்பத்தி செயல்முறையை பெருக்குவது குறித்து விளக்கினார்.

முதற்கட்டமாக, நாடளாவிய ரீதியில் உள்ள இராணுவத்தினர், விவசாய நிபுணர்கள், விவசாய அதிகாரிகள் மற்றும் இராணுவ விவசாய மற்றும் கால்நடை பணியகத்தின் அனுபவம்வாய்ந்த அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, தெரிவு செய்யப்பட்ட விதை வகைகளை பயிரிடுவதற்கு அவசியமான களையெடுத்தல், உழுதல் மற்றும் பாத்திகளை தயார் செய்தல் மூலம் அந்த அரச நிலங்களில் தரை மண்ணை தயார் செய்வர். அத்தோடு ஏற்கனவே இராணுவத்தால் 16 பண்ணைகள், மற்றும் இலங்கை இராணுவ விவசாய மற்றும் கால்நடைப் படையணியின் 6 பட்டாலியன்கள் நாடு முழுவதும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

அத்தோடு, நாடு முழுவதும் உள்ள அனைத்து பாதுகாப்புப் படைத் தலைமையகங்களும் படைப்பிரிவுகளும் தேசத்தின் பாதுகாவலர்களாக, கைவிடப்பட்ட அரச நிலங்கள் மற்றும் நெல் வயல்களைப் பயன்படுத்துவதற்கான திறனை தற்பொழுது ஆராய்கின்றன. தெரிவு செய்யப்பட்ட காணிகளில் பூர்வாங்க வேலைகளை ஆரம்பிக்கும் முன்னர், அந்தந்த ஆளுநர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள், காணி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராமசேவை உத்தியோகத்தர்கள் ஆகியோரின் நெருக்கமான ஆலோசனையுடன் பிராந்திய மட்டத்தில் அரச காணிகளை அடையாளம் காணப்படவுள்ளது.

# நவீன பாதுகாப்பு முறைமைகளை கையளிக்கும் நிகழ்வு வாழைத்தோட்டம் அல் - ஹிக்மா கல்லூரியில்





(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

கொழும்பு -12 வாழைத்தோட்டம் அல்-ஹிக்மா கல்லூரியின் (தேசிய பாடசாலை) பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையில் ஏற்பாடு செய்யப்பட்ட கல்லூரிக்கான நவீன முறையிலான பாதுகாப்பு அறை, சிசிடிவி மற்றும் இன்டர்கொம் முறைமைகளை உத்தியோகபூர்வமாக பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கும் நிகழ்வு மற்றும் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் அணிவித்தல் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் கல்லூரியில் இடம்பெற்றது.

கல்லூரியின் அதிபர் எம்.எம். மஹ்சூர் மற்றும் பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவர் டாக்டர் எச்.எம்.எச். இஸ்மத் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பணிப்பாளரும் பேச்சாளரும் தலைமைத்துவ விரிவுரையாளருமான கேர்ணல் நளின் ஹேரத் பிரதம அதிதியாகவும் இக்கல்லூரியின் பழைய மாணவியும் கொழும்பு கல்வி வலயத்தின் தமிழ்ப் பிரிவுக்கான உதவி கல்விப் பணிப்பாளருமான திருமதி எம்.எச். மும்தாஸ் பேகம், தொழிலதிபர் சப்பார் ரய்னுடீன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் தொழிலதிபர்களான நிஸ்வான் ஆசிரியர், இர்ஷாட், ரில்வான் மற்றும் சபர் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு சுமார் ஒரு மில்லியன் ரூபா செலவில் தயாரிக்கப்பட்ட பாதுகாப்பு முறைமையே பழைய மாணவர் சங்கத்தினால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

இதேவேளை, தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்பட்ட கல்லூரி மாணவ மாணவிகளுக்கான சான்றிதழ்களும் சிரேஷ்ட மாணவத் தலைவர் மற்றும் தலைவி உட்பட தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 60 மாணவத் தலைவர்களுக்கான சின்னங்களும் சூட்டப்பட்டன.

இந்த நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் பொதுச் செயலாளரும் ஊடகவியலாளருமான ஸாதிக் ஷிஹான், பொருளாளர் எம்.எஸ்.எம். ஹஸன், உப தலைவர் எம்.எஸ்.எம். புஹாத் மேற்படி பாதுகாப்பு முறைமை திட்ட இணைப்பாளர் அஸ்ரின் ஹனீபா, பாடசாலை முகாமைத்துவ கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு பிரதிநிதிகள் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# கடின இலக்கை இலகுவாக துரத்தியடித்த இலங்கை அணி




## 12 ஆண்டுகளின் பின்னர் இன்று புது வரலாறு உருவாகுமா?

அவுஸ்திரேலிய அணியுடனான மூன்றாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் குசல் மெண்டிஸ் - பெத்தும் நிசங்க ஆகியோரின் அபார இணைப்பாட்டம் மூலம் கடின இலக்கை இலங்கை அணி இலகுவாக துரத்தியடித்தது.

5 போட்டிகள்கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரின் முதலிரு போட்டிகள் நிறைவில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி வீதம் பெற்ற நிலையில், மூன்றாவது போட்டி நேற்று முன்தினம் கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெற்றது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட் இழப்புக்கு 291 ஓட்டங்களை குவித்தது.

292 என்ற கடினமான வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு ஆடிய இலங்கை அணி 42 ஓட்டங்களுக்கு முதல் விக்கெட்டை இழந்தது. எனினும், அடுத்து இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த குசல் மெண்டிஸ் - பெத்தும் நிசங்க ஜோடி 170 ஓட்டங்களை குவித்த நிலையில், குசல் மெண்டிஸ் 87 ஓட்டங்களுடன் ரிட்டயர்ட் ஹேர்ட் முறையில் வெளியேறினார். எனினும், அடுத்து ஜோடி சேர்ந்த தனஞ்ஜய டி சில்வா அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

மறுமுனையில் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கி நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய பெத்தும் நிசங்க ஒருநாள் அரங்கில் தனது முதலாவது சதத்தை பதிவுசெய்து 137 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இறுதியில் 48.3 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்த நிலையில் இலங்கை அணி வெற்றியிலக்கை அடைந்தது. போட்டியின் ஆட்டநாயகனாகவும் பெத்தும் நிசங்க தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் இலங்கை அணி தொடரில் 2-1 என முன்னிலை வகிக்கும் நிலையில், நான்காவது போட்டி இன்று இதே மைதானத்தில் நடைபெறவுள்ளது. இன்றைய போட்டியில் இலங்கை அணி வெற்றிபெறும் பட்சத்தில் 12 ஆண்டுகளின் பின்னர் ஆஸி. அணியுடன் ஒருநாள் தொடரைக் கைப்பற்றி சாதனை படைக்கும். இறுதியாக கடந்த 2010ஆம் ஆண்டு 2-1 என்ற அடிப்படையில் ஒருநாள் தொடரைக் கைப்பற்றியதன் பின்னர் 12 ஆண்டுகளாக இலங்கை அணி ஒருநாள் தொடரைக் கைப்பற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# என் வாழ்நாளில் மோசமான நேரம் அதுதான்



## கடத்தப்பட்ட சம்பவத்தை நினைவுகூர்ந்த ஆஸி. கிரிக்கெட் வீரர்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்துவீச்சாளர் ஸ்டுவர்ட் மெக்கைல் தன் வாழ்க்கையில் அனுபவித்த துன்பமான நிகழ்வு குறித்து மனம் திறந்துள்ளார்.

கடந்த ஆண்டு ஸ்டுவர்ட் மெக்கைல், சிட்னி புறநகர்ப் பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது 2 இளைஞர்கள் வழிமறைத்து மெக்கைலுடன் மோதலில் ஈடுபட்டுள்ளனர். அப்போது துப்பாக்கியை காட்டி மிரட்டி காரில் அவரை ஏற்றியுள்ளனர். அதனைத் தொடர்ந்து 2 இளைஞர்களும் மெக்கைலின் ஆடையை கழற்றி நிர்வாணப்படுத்தியுள்ளனர்.

மெக்கைலை ஆடையில்லாமல் போட்டு அடித்து தாக்கிவிட்டு, சுமார் ஒன்றை மணிநேரம் காரில் சுற்றிவிட்டு வேறு ஏதோ இடத்தில் தூக்கி வீசியுள்ளனர். இது குறித்து தற்போது பேசிய மெக்கைல், என் வாழ்நாளில் மோசமான ஒன்றரை மணிநேரம் என்றால் அதுதான். இந்த சம்பவத்துக்கு பிறகு என் வாழ்க்கையே மாறிவிட்டது. நான்தான் அவர்களிடம் தவறாக நடந்துகொண்டு போதைப் பொருள் விற்றதாக என்னை அடித்தவர்கள் பொலிஸில் கூறினர். ஆனால், விசாரணையில் என் மீது தவறு இல்லை என்று தெரியவந்தது எனக் கூறியுள்ளார்.

# சம்பியன் பட்டத்தை சுவீகரித்த ஆர்.பி.ஆர். அணி





(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை மாவட்டம், கிண்ணியா குறிஞ்சாக்கேணி வீசி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற அணிக்கு 11 பேர்கொண்ட மென்பந்து சுற்றுப் போட்டியில் ஆர்.பி.ஆர். அணியினர் சம்பியன் பட்டத்தை தனதாக்கிக் கொண்டனர்.

40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்காக நடத்தப்பட்ட இச் சுற்றுத் தொடரில் மொத்தமாக 8 அணியினர் பங்குபற்றினர். அரபா விளையாட்டுக் கழகம் நடத்திய இப்போட்டியில் இறுதிச் சுற்றுக்கு ஆர்.பி.ஆர். மற்றும் பைனியர்ஸ் அணியினர் ஒன்றையொன்று எதிர்த்தாடினர். 10 ஓவர்கள்கொண்ட இப்போட்டியில் ஆர்.பி.ஆர். அணியினர் 7 விக்கெட் இழப்புக்கு 75 ஓட்டங்களை பெற்று சம்பியன் பட்டத்தை தனதாக்கிக்கொண்டனர். பதிலுக்கு ஆடிய பைனியரஸ் அணியினர் 8 விக்கெட் இழப்புக்கு 71 ஓட்டங்களை பெற்றனர்.

மூன்றாவது தடவையாகவும் ஆர்.பி.ஆர். அணியினர் 40 வயதுக்கு மேற்பட்ட மென்பந்து சுற்றுப் போட்டியில் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தமை குறிப்பிடத்தக்கது. சம்பியனாக தெரிவாகிய அணிக்கு பணப்பரிசாக 15,000 ரூபாவும், கேடயமும் வழங்கப்பட்டதுடன், இரண்டாம் இடத்தைப் பெற்ற பைனியர்ஸ் அணிக்கு 10,000 ரூபாவும், கிண்ணமும் வழங்கப்பட்டன. இறுதிப் போட்டிக்கு பிரதம விருந்தினராக டொக்டர் சமீம் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார்.




# சாதனை படைத்த மெண்டிஸ் - நிசங்க ஜோடி

இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் குசல் மெண்டிஸ் - பெத்தும் நிசங்க ஜோடியானது இரண்டாம் விக்கெட் இணைப்பாட்டமாக 170 ஓட்டங்களைப் பகிர்ந்தது. இந்த இணைப்பாட்டம் இலங்கை அணி சார்பில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான ஒருநாள் போட்டிகளில் 2ஆம் விக்கெட்டுக்காக பெறப்பட்ட அதிகூடிய இணைப்பாட்டமாக மாறியிருக்கின்றது.

இதற்கு முன்னர் அரவிந்த டி சில்வா - குமார் சங்கக்கார ஜோடி 2006ஆம் ஆண்டில் 163 ஓட்டங்களை இரண்டாம் விக்கெட்டுக்காக அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக பகிர்ந்ததே அதிகூடிய இரண்டாம் விக்கெட் இணைப்பாட்டமாக காணப்பட்டிருந்தது.

# ரசிகர்களுக்கு 50 சதவீத பணத்தை மீளப்பெறும் வாய்ப்பு




இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையேயான 5ஆவது இருபதுக்கு 20 போட்டி வெறும் 5 ஓவர்கள் கூட வீசப்படாத நிலையில் மழையால் முழுமையாக கைவிடப்பட்டதால், ரசிகர்களுக்கு 50 சதவீத டிக்கெட் பணம் திருப்பித் தரப்படுமென கர்நாடக மாநில கிரிக்கெட் சங்கம் தெரிவித்துள்ளது.

சுற்றுலா தென்னாபிரிக்கா - இந்திய அணிகளுக்கு இடையேயான 5ஆவது கடைசியான முக்கியமான போட்டி பெங்களூரிலுள்ள சின்னசாமி ஸ்டேடியத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்திய அணி பேட்டிங் விளையாடிக்கொண்டிருந்தபோது 3.3 ஓவரில் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. இரவு முழுவதும் மழை பெய்ததால் ஆட்டம் கைவிடப்பட்டது. இந்தத் தொடர் 2-2 என்ற சமநிலையில் இருந்ததால் இந்தப் போட்டியை பெரிதும் எதிர்பார்த்து காத்திருந்த கிரிக்கெட் ரசிகர்கள் ஏமாற்றமடைந்தனர்.

இந்நிலையில், விதிமுறைகளின்படி கிரிக்கெட்டில் ஒரு பந்து வீசினாலும் டிக்கெட் பணம் திருப்பித் தரப்பட மாட்டாது. இருப்பினும், கே.எஸ்.சி.ஏ. கிரிக்கெட் ரசிகர்களுக்காக டிக்கெட் பணத்தில் 50 சதவீத பணத்தை திருப்பித்தர இருக்கிறது.

உண்மையான டிக்கெட்டை கொண்டுவந்து பணத்தை திரும்ப பெற்றுக் கொள்ளலாம். அதற்கான நடைமுறைகள் குறித்து விரைவில் தெரிவிக்கப்படும் என கர்நாடக மாநில கிரிக்கெட் சங்கம் தெரிவித்தது.

# கரப்பந்தாட்ட சம்பியன் பட்டத்தை சுவீகரித்தது தம்பலகாமம் பிரதேச அணி



(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை மாவட்ட மட்ட போட்டியில் தம்பலகாமம் பிரதேச செயலகத்தை உள்ளடக்கிய அணியினர் கரப்பந்தாட்டத்தில் சம்பியன் பட்டத்தை சுவீகரித்தனர்.

திருகோணமலை மக்கேய்சர் உள்ளக விளையாட்டரங்கில் இறுதிப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதில் சுமார் 8 பிரதேச செயலகங்களை சேர்ந்த அணியினர் பங்குகொண்ட நிலையில் தம்பலகாமம் பிரதேச செயலகத்தை உள்ளடக்கிய அணியினர் கரப்பந்தாட்டத்தில் சம்பியன் பட்டத்தை தனதாக்கினர்.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ. ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க விளையாட்டு உத்தியோகத்தர் கே.டி.ஹாரிஸ் குறித்த அணியினருக்கு திறம்பட பயிற்சியளித்து வந்தார். சுமார் 12 வருடங்களின் பின் ஆண், பெண் அணியினர் தம்பலகாமம் பிரதேசம் சார்பாக சம்பியனாக முடிசூடியமை குறிப்பிடத்தக்கது.

## தீர்மானமிக்க போட்டி மழையால் மண்ணானது

# T20 கிண்ணத்தை பகிர்ந்த இந்திய - தென்னாபிரிக்க அணிகள்




இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான 5 போட்டிகள்கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரின் தீர்மானமிக்க போட்டி மழையினால் முழுமையாக கைவிடப்பட, தொடர் 2-2 என்ற அடிப்படையில் சமநிலையில் நிறைவுக்கு வந்தது.

தொடரின் முதல் இரு ஆட்டங்களில் தென்னாபிரிக்காவும், அடுத்த இரு ஆட்டங்களில் இந்தியாவும் வெற்றி பெற்றதால் தொடர் 2-2 என்ற கணக்கில் சமநிலையை அடைந்தது. இந்நிலையில், தொடரை கைப்பற்றப் போவது யார் என்பதை முடிவுசெய்யும் 5ஆவதும், இறுதியுமான போட்டி பெங்களூர் எம்.சின்னசாமி ஸ்டேடியத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெறுவதாக இருந்தது.

நாணய சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பை தெரிவுசெய்தது. மழையால் ஆட்டம் 1 ஓவர் குறைக்கப்பட்டு 50 நிமிடங்கள் தாமதமாகி 7.50 மணிக்கு ஆரம்பமானது. 3.3 ஓவர்களில் இந்திய அணி 2 விக்கெட் இழப்பிற்கு 28 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் மீண்டும் மழை குறுக்கிட்டது. தொடர்ந்து மழை வெளுத்து வாங்கியதையடுத்து ஆட்டத்தை கைவிடுவதாக அறிவிப்பு வெளியானது.

இதனால் தொடர் 2-2 என்ற கணக்கில் சமநிலையில் நிறைவுக்கு வந்தது. பந்துவீச்சில் சிறப்பாக செயற்பட்ட இந்திய வீரர் புவனேஷ்வர் குமார் தொடர் நாயகனாக தெரிவுசெய்யப்பட்டார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7